KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலா நிலயம்.
V7. No.5. 1.2.1934

௧

m211,N22KN
N34.7.5
199155

KALANILAYAM   தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.]   1934 ௵ பிப்ரவரி ௴ 1௳   [No. 5

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 65
2. அறிவாசிரியன்
K. S. முத்துராமலிங்கம் M. A. 67
3. தமிழ்ப் பாடம்
வில்லிபாரதம்—கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 69
4. நம்மாழ்வார் வைபவம் (6-ம்பத்து, 3-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 71
5. மதுரைக் கோவை. (பாங்கற் கூட்டம்)
S. வையாபுரிப் பிள்ளை, B.A.B.L. 72
6. அப்பர் (64 கலை-இதிகாசம்-கர்தன் சரிதை)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 74
7. சூளாமணி—(நாட்டுப் படலம்) வித்வான்
T.P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, M.A.B.L. 75
8. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை
(பருல வேடலேனு)
P. B. ஸ்ரீநிவாசாச்சாரியார், B. A. 77
9. கம்பராமாயணம்—(அநுமப் படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 78
10. வர்த்தமானம் 80

கலாநிலயம்

உண்மையே உண்மை யம்மா 2.

வெல்லாமல் எவரையும் மருட்டிவிடுகின்ற வகையே தந்த இப்பள்ளிக்கூட வித்தைகள் ஒரு முத்தி தருமோ வெனத் தாயுமானவரைப்போல் அவருக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் னிருந்த சாங்ட்ஸூவும் ஏங்குகின்றார் என்றால், இந்த எண்ணம் நம் பொதுஜனத் தலைவர்கள் தலையில் ஏழைமை விந்தையே விந்தை, உண்மை. பள்ளிக்கூடங்களிலெவ்வளவுதான் கற்றாலும் அக்கல்வியினால் வருகின்ற அறிவெல்லாம், இன்னும் அறியப்படாமல் இருப்பதன் அளவைக் கருதுங்கால், மிகமிகச் சிறியதே. அறிவதற் கியலாமல் எஞ்சிநிற்பதே, உண்மையில் உபயோகப்படுவதற் குரியது. சாக்ரிடீஸ் போன்ற நுண்ணிய மதியினோர் இதனைத் தேர்ந்து உரைத்தனர். இந்த உண்மையை நாமே முதலில் ஊகித்து உணரவல்ல புத்திநுட்பம் நமக்கு இல்லையாயினும், அறிவாளிகளாகிய அன்னவர் கண்டுரைத்த பின்னேனும் தெரிந்துகொண்டு வாழ்வதற்கு முயலாமல் விட்டுவிடுகின்ற பாவத்திற்கோ ஒருநாளும் பரிகாரம் இல்லையே. ஒருவராலும் அறியப்படாததாய் நிற்கின்ற அவ்வொரு தத்துவப்பொருளினது நினைவினாலன்றோ மானுட ஒற்றுமையின் உண்மையை உணர்தல் வேண்டும். அவ்வாறின்றி, இப்பள்ளிக்கூடப் படிப்பானது ஒவ்வொருவனையுந் தனித்தனி வேறுவேறு 'அபிப்பிராயங்களும்' 'கொள்கைகளும்' உடையவன் ஆக்கிப் பிரித்துவிடுகின்றது. அபிப்பிராயங்களும் கொள்கைகளும் இப்படி எங்கும் எதிரெதிர் நின்று தலைவிரித்தாடும்படி, மனிதர் வீண்வாதங்கள் செய்யுமொரு இழிந்த பழக்கத்திற்கு ஆளாகின்றனர். "இனி உயி[illegible]ட்டார் என்னும்படி உணர்விழந்து அழிந்து போனவர்களே வாதங்கள் செய்ய வருவார்," என்று சாங்ட்ஸூ சந்தேகமின்றிக் கூறுகின்றார். கூறி ஹாய்ட்ஸூ என்னும் வேறோர் சீன நூலாசிரியனைப் பின்வருமாறு பரிகசம் செய்கின்றார்.—

"ஹாய்ட்ஸூவைப் பாருங்கள். அவனால் யாது பயன்! அவன் எழுதியிருக்கின்ற நூல்களை ஐந்து வண்டிக்கு ஏற்றலாம். ஆயினும் அவன் உரைப்பதெல்லாம் விபரீதங்களே. குஞ்சின்மீது சிறகு இருப்பதால் முட்டையிலும் சிறகுகள் இருக்கத்தானே வேண்டும் என்று வாதிப்பவன் அவன். எல்லாப் பெயர்களும் இடுகுறியேயாதலால், நாயைப் பார்த்துப் பூனையென்று கூறினாலும் பிழையில்லையாம். கணவனும் மனைவியும் சேர்ந்து மூன்றுபேர் ஆகின்றனராம்; ஏனெனில், தனித்தனி இவர் இருவர், ஒன்றாய்க் கொண்டால் இவ்விருவரும் ஒருவர், ஒன்றும் இரண்டும் மூன்று, ஆகையால் கணவனும் மனைவியும் மூவர். சீ, சீ! இவன் கற்ற எண்ணும் எழுத்தும் மண்ணெனத் தகுமே!"

இத்தகைய கல்வியோ தருமசிந்தனையைத் தளர்த்திவிடுமே, என்று சாங்ட்ஸூ மிகவும் இரங்குகின்றார். தருமம் என்பது ஓர் மனநிலை, சிந்தனையைச் சேர்ந்தது. அதைப்பற்றிச் சனங்கள் பேசத் தலைப்பட்டவுடன் தருமமானது சிந்தனையிலிருந்து வாய்க்கு இறங்கிவிடுகின்றது. மானுடதர்மமென்றும் சனாதனதர்மமென்றும் ஜனங்கள் பேசிப் பேசி வாதிக்கத் தலைப்பட்டதும், தருமசிந்தனை யத்தனையும் மனிதர் மனத்தினை விட்டுக் குடிபெயர்ந்து போய்விடுகின்றது. உள்ளுணர்வும் ஆன்றோர் மரபுமே அடிப்படையாகவில்லையென்னின் அப்புறம் மனிதவாழ்க்கை சாறில்லாத கோதிற்கே நேர். "வாழ்க்கையை வாழ்வதல்லால் அதற்கு வேறு சில குறிக்கோள்கள் உண்டென்று காண்கின்ற

குருடர்களும், அதனைப் பிறருக்குப் போதிக்க வருகின்ற ஊமைகளும், போதிப்பதைச் செய்துமுடிக்கப் புகுகின்ற முடவர்களும் ஆகின்றவர்தாம் மனிதரோ அல்லர்; வேறு அவருக்கு என்னவென்று பெயரிட்டு அழைப்பதென்று எனக்குத் தெரியவில்லையே" எனச் சாங் ட்ஸூ பகர்வது,

> மக்களே போல்வர் கயவ ரவரன்ன
> ஒப்பாரி யாங்கண்ட தில்

என்னுந் திருக்குறளை நகையுற நினைவூட்டும். "இன்னவாறு, தருமம் என்னும் பெயரால் நடைபெறும் கயமைத்திருவிழாவில், பரோபகாரத் தொழிலினரும் அரசியல் வாதிகளும் வந்துமிகக் கலந்துகொள்கின்றனர். அப்புறம் விளைவதைக் கேட்பானேன். முன்னவர், மனிதரை நல்லவர் ஆக்கமுயல்வதில் அம்மனிதருக்கு இயற்கையாய் இருந்த தரும சிந்தனை எல்லாம் அழிந்துவிடுகின்றது; பின்னவர் "சனங்களுக்கு நன்மை செய்கின்றோம்" என்று சொல்லச்சொல்லவோ துன்பமே எங்குந் தலையெடுக்கின்றது. வாழ்க்கையைப் பாழ்செய்ய வேறென்ன வேண்டும். உலகம் தருமத்தில் இடறி இடறித் தன்னிலை கெட்டுத் தடுமாறி நடுங்குகின்றதே."

எனின், சாங் ட்ஸூவின் கருத்தின்படி மனிதன் எனத் தகுந்தவன் யாவன்? அவன் எவ்வகை வாழ்க்கை வாழ்கின்றான்? என வினவுவோமாயின் அவரது சிந்தனை பின்வருமாறு அமைகின்றதென்பது தெரியவரும்—"பிரபஞ்சத்தைப் பரிவுடன்பார்த்திருப்பதேயல்லால் உத்தமமான மனிதன் வேறொன்றுஞ் செய்யான். இதுதான் தனது நிலை என்று அவன் ஒன்றையும் மாறாத முடிவாக ஏற்றுக்கொள்வதில்லை. அசையுங்கால் ஆற்றுநீர் ஓட்டத்தின் அமைதியைக் காட்டுகின்றான். நிற்குங்கால் பளிங்குபோல் பிரபஞ்சமத்தனையும் அவன்பால் தெரிகின்றது. எதிரொலி என்னத் தன்னுடன் பேசுவார்க்குஅன்றிஅவன் ஒன்றும்பேசுவதில்லை. தனக்கு வெளியிலுள்ளவைகளால் தாக்கப்படுவதில்லை. உலக சம்பந்தமான தொன்றும் அவனை வருத்துவதில்லை, தெய்வசம்பந்தமுடைய தொன்றும் அவனைத் தண்டிப்பதுமில்லை. அவன் மனத்தின் சஞ்சலமற்ற நடுநிலைமையே இவ்வுலகின் பேரரசினை அவனுக் களிக்கின்றது. புறத்திருக்கும் பொருள்களுக்கு அவன் ஒருபொழுதும் அடிமை ஆகமாட்டான். பேசாத சொல்லே பெரிய சொல் என்ன ஆவதேபோல், செய்யாத காரியமே பெரியகாரியம் என்பதையும் அறிந்தவன் அவன். அசையாமல் நின்று உயிர்வாழ்க்கையின் நியதிவிதிகளை ஏற்றுக்கொள்கின்றான். 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கையனாய்'த்தான் இனிது அமைந்து, உலகமானது தானே யாண்டு பலவாகியும் நரையிலவாகும் நீர்மையை நோக்குகின்றனன். மெய் வருந்தி அவன் தன்னை வீண்செய்துகொள்வதில்லை. பெருமை சிறுமை என்னும் வேற்றுமைபற்றிய கவலையொன்றும் அவன் கொள்ளான். விடயங்கள் இருக்குமாறு இருக்கின்றனவென்றும், அவைதம் விளைவுகள் ஆகுமாறு ஆகும் என்னவும் அவன் அறிவான். அவன் மனமானது இச்சிருஷ்டிக் கோர் கண்ணாடி போன்றது. என்றுமே அவன் அமைதியுடன் இருக்கின்றான்."

சாங் ட்ஸூ, பூரண வாழ்க்கை வாழலாகின்றவோர் மனிதனைப்பற்றிக் கொள்கின்ற காட்சி இது. கிரேக்க வித்தகர் அரிஸ்ட்டாடல் என்பவர்தம் சிந்தனைகளும் இவ்வாறேஅமைந்திருந்த தன்மையை நம்பண்டைய தலையங்க மொன்றில் உரைத்து இருக்கின்றோம். இத்தகைய ஒரு தனி வாழ்க்கையின் சிறப்பை, பெரும்பாலும் சாங் ட்ஸூவின் மொழிகளை வாங்கிக்கொண்டு பாடியிருப்பதுபோல், கணியன் பூங்குன்றன்,

> யாது மூரே யாவருங் கேளிர்
> தீது நன்றும் பிறர்தர வாரா
> நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
> சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
> இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
> இன்னா தென்றலு மிலமே மின்னொடு
> வானந் தண்டுளி தலைஇ யானாது
> கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
> நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
> முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
> காட்சியிற் றெளிந்தன மாதலின் மாட்சியிற்
> பெரியோரை வியத்தலு மிலமே
> சிறியோரை யிகழ்த லதனினு மிலமே

[எமக்கு எல்லாம் ஊர், எல்லாரும் சுற்றத்தவர். கேடும் நன்மையும்தாமே ஒருவனுக்குவந்தால்வருமே அல்லதுபிறரால்விளைவது என்பதில்லை. வருந்துவதும் அவ்வருத்தம் தீர்வதும்அப்படியே தன்னாலே நேர்வனவன்றிப் பிறரால் நேர்வன அல்ல. சாவதும் புதியதுஅன்று. மனிதன் பிறந்த அன்றைக்கே மரணம் தொடங்கியுள்ளது. இவ்வாழ்க்கையை இனியதென்று எக்காலத்தும் உவந்ததும் இல்லை, அல்லது துன்பமுடையதென்றுவெறுத்ததும்இல்லை. மின்னலுடனேமழை குளிர்ந்த துளியைப் பெய்தலால் குறையாமற் பெருகிக் கல்லை அலைத்து ஒலிசெய்கின்ற வளப்பமுடைய பெரிய ஆற்றின்நீர்வழியே போகும் மிதவைபோல், அரியவுயிரானது அதனதற்குஅமைந்தமுறையின்வழியே அமையும் என்பது, அறிவின் திறமை வாய்ந்தவர் கண்டு கூறியிருப்பவைகளால் யாம் தெளிந்துகொண்டோமாதலின், நன்மைமிக்க பெரியோரைக்கண்டு யாம் யாதும்அதிசயங் கொள்வதுமில்லை, சிறியோரைக் கண்டுஇகழ்தல்என்பது அதனினும் இல்லையே]

என விளம்பியபொழுதுங் காணலாம். சீன வித்தகன் சாங் ட்ஸூவும் தமிழ் மூதறிஞன் கணியன் பூங்குன்றனும், இன்னவாறு உயரிய வாழ்க்கைநிலையை ஒருபடித்தாக உரைப்பாரெனின் வேறு பலர் பலப்பல வேறு பகரப்புகுவதும் அதனை மனிதர் கேட்கப் புகுவதும் ஆகிய இவ்விரு பரிபவத்தையும் யாரிடத்துநாம் உரைசெய்து ஆறுவோம்.

இக்காலம் சாங் ட்ஸூவும் கணியன்பூங்குன்றனும் சொல்வனவற்றைக் கேட்கப் பலர் மனம்வருந்துவார் உண்மையே. சிந்தனையில் ஆழ்ந்திருக்கத் துணியாத சோம்பேறிகளே, காரியங்கள் பல செய்யவேண்டுமே என்னும் ஊக்கங்கொண்டுஉழல்வார்என்று அவர்தாம் உரைக்குமிது நம்மிடையே சில சீர்திருத்தச் சுறுசுறுப்பாளிகளுக்குக் கோபத்தையும் உண்டாக்கலாம், உண்மையே. தனக்குச் சம்பந்தமில்லாததில் ஒருவரும் தலையிடலாகாது என்னுமிக் கருத்தைக் கைக்கொண்டால் நம் பொதுஜனஉபகாரிகள்எண்ணிறந்தோர் வேலையில்லாதார்தொகுதியைச் சேரவேண்டிவரும், உண்மையே. உபயோகமுள்ளனவென்றுஇக்காலம்கருதப்படுகின்றவைகளின் உபயோக மின்மையை உணர்ந்து ஏற்றுக்கொண்டால் பின் [illegible]ல்லாம் தரைமட்டமாகவேண்டி[illegible] உண்மையே. பல[illegible]ங்களெல்லாம் வௌவால் வசிக்குங் கிடங்குகள் ஆகவேண்டும், வோட்டுப்பெட்டிகளெல்லாம் பொதுஜனப்பிச்சைப்பாத்திரமாதல்போக அடுப்பிற்குஉடைத்த விறகாகவேண்டும், உண்மையே. கணியன் பூங்குன்றனும் சாங் ட்ஸூவும் இப்பொழுது விண்ணிலிருந்து திரும்பிவந்து நமது ஏழை உலகத்துத் தற்கால நடத்தையைப் பார்ப்பார்களேயாயின், நம்முடையநாகரிக முயற்சிகளைக்குறித்துத் தம்முள் உசாவி யாது சொல்வார்களோ என்பதை ஒருவாறு ஊகிப்பது அருமையன்று. "ஏ அரசியல் வாதிகாள், சீர்திருத்தக்காரர்காள் உங்களால் விளைந்த தீமைகளை நீங்களே தெரியக்காணுங்கள். மனிதனை இரவுமுழுவதும் கண்கொட்டாமல் புரளவைத்திருப்பதால் கொதுகிற்கு ஏதேனும் பெருமையுண்டோ, மனிதனுக்கு யாதேனும் நன்மைதான் உண்டோ! நீங்கள் தட்டியெழுப்பி முன்னேற்ற முயல்கின்ற முயற்சியெல்லாம் அத்துணையே. ஐயன்மீர், மனிதர்தம்இயற்கையாய நலன்களைத்தாமேமீண்டும்பெறும்படி அவர்களைச்சும்மாவிட்டுவிடுங்கள். மனிதனை ஆள்வதென்பதேனும் சீர்திருத்துவதென்பதேனும் ஆகாதகாரியம் என்பதை இதுகாறும் அறியீராயின் உங்கள்மதியை என்சொலி வியப்போம். மற்று, ஆகாமையுடன், எல்லாம் அவலமாவதற்கும் அவ்வகைமுயற்சியே காரணம். ஆள்வதெல்லாம் ஒவ்வொருவனும் தன்னைத் தானே ஆண்டுகொள்வதன்றி வேறில்லை. மனிதன் கெடாமல் இருக்கவேண்டுவதேயன்றி சீர்திருந்தலொன்றுமில்லை. தருமத்தையும்உரிமையையும் காக்கின்றோம் என்றென்று நீங்களே உணராத சொற்களை உரைத்து உரைத்து உலகத்தை உழக்காதீர். தருமம் நம்மைக் காக்கவேண்டுமென்று அதனைச் சும்மா விட்டிருந்தால்போதும். மற்று, தருமத்தைக் காக்கப் புகுவதற்கு யாவரே நீவிர்! பணத்தைத் தொடர்ந்து இவ்வண்ணம் ஓடுகின்றீர்களே, உங்களுக்கு மானம் இல்லையா. வேறென்! நீங்கள் சாதித்திருப்பவைகளைக் காணக்காண எங்கள் சிந்தனை மாழ்குகின்றது. போங்கள். நாங்கள் வியந்து ஒருவரைப் புகழத்தான் நினைத்தாலும், அதற்குரியவர் எங்கள் கண்முன் வரக்காண்கிலம். நாங்கள் யாரையும் இகழ்வதில்லை யாகையால், உங்களை நாங்கள் இகழ்கின்றோம் அல்லோம்..."— என்று அவ்விருபெரும் அறிஞர்களும் இக்கால மக்களுக்கு எடுத்தியம்ப மனங்கொள்வார்களாயின், அத்துணையும் உண்மை என்று ஒகைவிளம்பவல்ல சான்றோர் சிலர் இக்காலத்திலும் இலராகார். புத்திக்குப் பதிலாய்க் கையும் வாயும் வேலைசெய்யத் தலைப்பட்டு இருக்கின்ற இக்காலத்திற்கு, அழ அழச் சொல்லும் இவ்வாசகங்கள் போன்ற மருந்து வேறில்லை. மற்றவரை முன்னேற்ற முயல்கின்ற முயற்சியினிடையே தானே 'முன்னேற' நேரமில்லாமற்போய்விடுகின்றது. இயற்கையோடுஇயன்ற சுயகல்சரால் வாழ்க்கைத் தத்துவம் வளர்வதன்றி, விழைவதற்குரியதும் உழைப்பதற்குரியதும் வேறு ஒன்றுமில்லை. மற்றபடி ஒரு தேயத்தவர் சாதித்திருக்கின்ற முன்னேற்றங்கள் எல்லாம், மானுட மானத்தைப் பொசுக்கிக் குவித்திருக்கின்ற சாம்பற் குவியல்களே. முன்னேறியிருக்கின்றோம் என்று எவரேனும் தம்மைப் புகழ்ந்துகொள்வார்களாயின், நன்று, ஆஸ்க்கார் வைல்ட் அவர்களுக்கு ஒன்று கூறுவார்—

The only thing that ever consoles man for the stupid thing he does is the praise he always gives himself for doing them.

199155

அறிவாசிரியன்

குழவியாய்த் தவழ்ந்தபோதே அவன், கடவுள் அறிவு முழுவதும் பெற்றவன்போல் தோன்றினான். இளைஞனாயிருந்த பருவத்தில் அவன் விளம்பிய அறிவுரைகளைக் கேட்டு அவ்வூர்ப் பெரியவர் அதிசயித்தனர்.

இடைவயது எய்தியதும் அவன் தன்னைப் பெற்றவர்பால் விடைகொண்டு, கடவுளைப்பற்றிய உண்மைகளை உலகத்திற்கு உரைக்கவேண்டுமென்று புறப்பட்டான். ஏனெனில், கடவுளைப்பற்றி ஒன்றுமே அறியாதாரும் அரைகுறையாக அறிந்தவரும் பலர் அக்கால உலகத்தில் எங்கும் மிகுந்திருந்தனர்.

காலிற் செருப்புமின்றிக் கையில் கட்டுச்சோறுமின்றிக் கீழ்த்திசைநோக்கி நடக்கலானான். பெருவழிநடக்குங்கால், கடவுளைப்பற்றிய முழு அறிவினால் வரும் விழுமிய உவகையால் நிறைந்திருந்தது இவன் உள்ளம். அக்கடவுளின் பெருமையை ஓயாமற் பாடி வழிநடக்கலானான். இவ்வாறு நடந்தவன் சென்று சேர்ந்தது நகரங்கள் பல இருந்த ஒரு புதிய தேசம்.

அத்தேயத்து நகரங்கள் பலவற்றின் வழியே இவன் சென்றனன். அந்நகரங்களிற் சில மலையடிவாரங்களில் இருந்தன; சிற்சில ஆற்றங்கரைகளில் இருந்தன; சில குன்றுகளின்மீது அமைக்கப்பெற்றிருந்தன. இவன் சென்ற ஒவ்வொரு நகரத்திலும், அன்புடனே இவனைப் பின்தொடரும் நற்சீடன் ஒவ்வொருவன் வாய்க்கப்பெற்றான். ஒவ்வொரு நகரத்திலிருந்தும் சனங்களும் பெரும்பெருங்கும்பலாகக் குழுமிஇவனைப்பின் தொடரலாயினர். இவ்வாறு, கடவுளைப்பற்றிய அறிவு அந்நாடு முழுவதும் பரவியது. மன்னர் பலர் இவனுடைய போதனைக்கு வயமாயினர்.

எனினும், இவனைப் பின்தொடர்ந்த சனங்களின் தொகையும் சீடர்களின் எண்ணும் அதிகரிக்க அதிகரிக்க இவனுக்குத் துயரமே அதிகரித்தது. தன் துயரம் ஏன் இத்தனை பெரியதாயிற்று என்பதற்குக் காரணம் அவனே அறியவில்லை. சென்றவிடமெல்லாம் கடவுளைப் பற்றியே பேசினான்; கடவுள் தன்னைப் பற்றித் தானே இவனுக்குச் சொல்லிக்கொடுத்திருந்த பூரண ஞானத்தின் நிறைவினின்று புகன்றவைகளே அவன் பேசிய மொழிகள்.

ஒருநாள் மாலை இவன் ஓர் பட்டினத்தைக் கடந்து சென்றான். அவன் சீடர்களும் எண்ணிறந்த சனங்களும் அவனைப் பின்தொடர்ந்தனர். ஓர் மலைமீது ஏறி அங்குள்ள ஓர் பாறையில் உட்கார்ந்தான். சீடர்கள் அவனைச் சூழ்ந்து நின்றனர். சனங்கள் அடிவாரத்தில் காத்திருந்தனர்.

தன் முகத்தினைக் கைகளில் புதைத்து அழுதனன். நெடியநேரம் அழுதபின், தன்னுடைய ஆன்மாவை நோக்கிக் கூறுவான்—"நான் ஏன் துயரமும் பயமும் நிறைந்தவனாக இருக்கின்றேன்? என்சீடர்களில் ஒவ்வொருவனும் ஏன் பகற்காலத்தில் திரியும் ஒரு பகைவனே ஆகின்றான்?"

இதற்கு மறுமொழியாக அவனது ஆன்மா உரைக்கும்—"கடவுள் தன்னைப்பற்றிய முழு அறிவுகொண்டு உன்னை நிறைத்தார். இந்த அறிவை நீ மற்றவர்களுக்குக் கொடுத்துத்தொலைத்துவிட்டாய். விலையில்லா அம்மாணிக்கத்தை நீ சிதைத்துவிட்டனை. எவன் தன்னுடைய அறிவைக் கொடுத்துவிடுகின்றானோ அன்னவன் தன்னையே கொள்ளையடித்துக்கொள்பவனாய் முடிகின்றான். தன் பொக்கிஷத்தைத் திருடனுக்குத் திறந்துவிடுகின்றவனையே ஒக்கின்றான் அவன். உன்னைக்காட்டிலும் அறிவுடையவர் அல்லரோ கடவுள்? கடவுள் உனக்குச் சொல்லிவைத்த இரகசியத்தை மற்றவர்க்கு உரைத்துவிட யாவனோ, ஒரு நீ? ஒருகாலத்தில் நான் செல்வவானாக இருந்தேன், நீயோ என்னை ஏழையாக்கிவிட்டாய். முன் ஒருகாலத்தில் நான் கடவுளைக்கண்டேன்; இப்பொழுது அக்கடவுளை நான் காணாவகை மறைத்துவிட்டாய்."

மீண்டும் அழுவதானான் இவன். ஏனெனில், தன்னுடைய ஆன்மாவானது முற்றிலும் உண்மையே உரைத்ததென்பதைத் தெரிந்துகொண்டான். கடவுளைப் பற்றிய பழுதற்ற அறிவைப் பிறருக்குக்கொடுத்துவிட்டானென்பதும், இப்பொழுது கடவுளின் மேலாடையையே பற்றித் தான்தொங்கிக் கிடக்கின்றானென்பதும், தான் சொல்வனவற்றை நம்புகின்றவர் தொகை அதிகரிக்க அதிகரிக்க, தான்கொண்டிருந்த நம்பிக்கையோ தன்னையே விட்டு அகல்கின்றதென்பதும் அவனுக்கு வெட்டவெளிச்ச மாயின.

இதன்மேல், "ஆம், எவன் தன்னுடைய அறிவைக் கொடுத்துவிடுகின்றானோ, அவன் தன்னையே கொள்ளையடித்துக்கொள்பவனாகி முடிகின்றான். ஆகையால், யான் இனி, கடவுளைப் பற்றி யாரிடத்தும் ஒன்றும் பேசமாட்டேன்"— என்று உறுதிசெய்துகொண்டனன்.

நாழிகை நாலைந்து கழிந்தபின் சீடர்கள் அவனருகு வந்து மண்ணுறவணங்கி, "குருவே, கடவுளைப்பற்றி எங்களுக்குச்சொல். கடவுளைப்பற்றிய பழுதற்றமுழு உணர்வு உனக்கே இருக்கின்றது, உன்னைத்தவிர யாருக்கும் இல்லை," என்று வேண்டினார்.

அவனோ அதற்கிணங்காமல், "மண்ணிலும் விண்ணிலும் உள்ள மற்றஎல்லாப்பொருள்களைப் பற்றியும் நான் உங்களிடம் பேசுவேன்; கடவுளைப்பற்றி மாத்திரம் பேசமாட்டேன். கடவுளைப்பற்றி உங்களிடம் இப்பொழுதும் பேசமாட்டேன், வேறு எப்பொழுதும் பேசமாட்டேன்" என்று மறுத்துவிட்டான்.

சீடர்கள் அவன்மீது கோபங்கொண்டனர். கொண்டு, "உன் மொழிகளை நாங்கள் கேட்கும்பொருட்டு எங்களை இந்தக் காட்டிற்கு நடத்திவந்தாய். இப்பொழுது எங்களையும், உன் பின்னே, நீயே தொடர்த்திக் கொணர்ந்தஇப் பெரியகும்பலையும் பசியுடன் அனுப்பிவிடுவாயோ' என்றனர்.

சனங்களும் சினமுடன் முணுமுணுத்து, "காட்டிற்குள் எங்களை நடத்திவந்தாய், உண்பதற்கு உணவொன்றுங் கொடுத்தாயல்லை. கடவுளைப்பற்றி எங்களுடன் உரையாடு. அதுவே எங்களுக்குப் போதும்" எனக் கூறினர்.

அவன் இதற்குப் பதிலாக ஒரு சொல்லேனுங் கூறவில்லை. ஏனெனில், கடவுளைப்பற்றித் தான் அவர்களுக்கு எது கூறினாலும், அது தன் பொக்கிஷத்தைக் கொடுத்துவிட்டதாக முடியும் என்பதை அவன் அறிவான். சீடர்கள் மனம் வருந்தி அகன்றனர்; சனங்களெல்லாருந் தத்தம் வீட்டிற்குத் திரும்பினர். வழியிலே மாய்ந்தனர் பலர்.

எல்லாரும் அகன்றபின் அவன் எழுந்து மேற்குமுகமாய், யாருடனும் பேசாமல் ஏழுதிங்கள் வழிநடந்தான். நடந்து பெரியவோர் வனத்தை அடைந்து, அங்கு ஒரு குகையைத் தனக்கு வசிக்குமிடம் ஆக்கிக் கொண்டு வாழலானான்.

தன்னைப்பற்றிய அறிவு சிறிதேனும் தன்பால் விட்டதற்காகக் கடவுளை அவன் மனமாரத் துதிக்காத நாள் இல்லை.

இவ்வாறாக, ஒருநாள் மாலைஇவன் தன் குகைக்கெதிரே உட்கார்ந்திருந்தபோது, அழகுடன் தீமையும் கலந்த முகமுடைய ஒரு வாலிபன், வெறும் கையினனாய்க் கிழிந்த ஆடையணிந்து அவ்வழி செல்லக்கண்டான். பின்னர் மாலைதோறும் அவ்வாலிபன் வெறுங்கையுடன் அவ்வழிச்சென்று காலையில் முத்தும் இரத்தினமும் நிறைந்த கைகளுடன் திரும்பி வந்தனன். அவன் ஒரு கள்வன், வணிகரைக் கொள்ளையடித்து வாழ்ந்தவன்.

நம் முனிவன் அவ்விளைஞனை நோக்கி இரங்கினான், எனினும் அவனிடம் ஒன்றும் பேசியதில்லை. ஏனெனில், வார்த்தை யொன்று வாய்திறந்து விளம்புகின்றவன் தான் கொண்டிருந்த நம்பிக்கையை இழந்தவனாகின்றான் என்பது அவனுக்குத் தெரியும்.

ஒருநாட் காலையில் முத்தும் இரத்தினமுங் கொண்டு திரும்பிய அவ்விளைஞன் முனிவனுக்கு எதிர் வந்து, முகஞ்சுளித்து, தரையைத் தன் கால்களால் உதைத்து, "நான் இவ்வழிச் செல்லுங்கால் எந்நாளும் என்னை நீ ஏன் இவ்வண்ணம் பார்க்கின்றாய்? உன் கண்களில் நான் காண்பதென்ன? இதுகாறும் ஒருவனும் என்னை இவ்வண்ணம் பார்த்ததில்லை. உன் பார்வை முள்ளைப்போல் தைத்து என்னை வருத்துகின்றது", என்றனன்.

"என் கண்களில் நீ பார்ப்பது இரக்கமே; இரக்கமே என் கண்களிலிருந்து உன்னைப் பார்க்கின்றது', என்று பதிலுரைத்தனன் முனிவன்.

இதுகேட்ட இளைஞன் வெறுப்புற நகைத்து, "முத்தும் இரத்தினமும் என் கைகளில் இருக்கின்றன. படுப்பதற்கு ஒரு நாணல்பாய் தவிர உனக்கு வேறொன்றுமில்லை. நீ என்னைக் கண்டு இரங்குவதெப்படி? இந்த இரக்கம் நீ கொள்வதற்கு யாது காரணம்? என வினவினான்.

"கடவுளைப்பற்றிய அறிவு உனக்கு இல்லாமையால் நான் உன்னைக் கண்டு இரங்குகின்றேன்" என்றுமுனிவன் எதிர் இயம்பினான்.

"கடவுளைப்பற்றிய இந்த அறிவு அரியதோர் பொருளோ?" என்று கேட்டுக்கொண்டே அவ்விளைஞன் குகையின் வாயிலருகு நெருங்கினான்.

"உலகத்திலுள்ள முத்துக்கள் இரத்தினங்கள் அனைத்தையும்விட அரியது அது" என்றான் முனிவன்.

"ஆயின், அது உன்னிடம் உளதோ" என்று அவ்விளங் கள்வன் பின்னும் நெருங்கினான்.

"ஒருகாலத்தில் நான் கடவுளைப்பற்றிய முழு அறிவும் உடையவனாகி இருந்தேன். ஆயினும், என் மடமையால் அதனை மற்றவர்க்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டேன். எனினும், இப்பொழுதும் எஞ்சி இருக்கின்றது அச்சிறு அறிவானது, முத்தையும்இரத்தினத்தையும் விட எனக்கு அருமையானது," என்று முனிவன் சாற்றினான்.

இதனைக் கேட்டவுடன் அவ் விளங்கள்வன், தன் கையில் வைத்திருந்த முத்துக்களையும் இரத்தினங்களையும் எறிந்துவிட்டு, தன் கூரிய உடைவாளை உருவிக்கொண்டு, அம்முனிவனை நோக்கி, "நீ வைத்திருக்கும் அக் கடவுளறிவை இப்பொழுதே எனக்குக்கொடு, கொடாயாயின் உன்னைக் கொன்றுவிடுவேன் நிச்சயம். என்கைப் பொருளைவிட உயர்ந்தவொரு நிதியத்தை வைத்திருக்கின்ற ஒருவனை ஏனோநான் கொல்லலாகாது" என்று கழறினான்.

முனிவனோ தன் மார்பினைத் திறந்துகாட்டி, "கொடுப்பேனாயின் எஞ்சிய அச்சிறு அறிவையும் இழந்தவனாவேன். கடவுளறிவு இல்லாமல் இவ்வுலகில் உயிர் சுமப்பதை விட, இறந்து போய் அக்கடவுளின் திருநாட்டு வெளிவாயிலில் நிற்பதே நன்றன்றோ. ஆதலின், என்னைக் கொல்வதாயின் கொல்; கடவுளைப் பற்றிய எனது அறிவை நானுனக்குக் கொடுக்கமாட்டேன்" என்னவே மறுத்துவிட்டான்.

இதன்மேல், அக் கள்வ இளைஞன் முனிவனை வணங்கி இரந்து வேண்டினான். முனிவனோ, கடவுளைப் பற்றிஅவனிடத்தில்பேசிலன், தன்நிதியத்தைத் தந்தானல்லன். ஆதலின், அவ்விளங்கள்வன், "நின் சித்தம் போலாகட்டும். நானோ, பஞ்சமகாபாதகப் பட்டினஞ் செல்கின்றேன். இங்கிருந்து மூன்றுநாள் தூரத்தில் இருக்கின்றது அது. அப் பட்டினத்தவர், என் இரத்தினத்திற்கு மாறாக இன்பங்கள் பல கொடுப்பார்; என் முத்துக்களுக்குப் பதிலாகக் களிப்பினை விற்றிடுவார்" எனக்கூறி முத்துக்களையும்இரத்தினங்களையும் திரட்டிக்கொண்டு விரைந்து நடக்கலானான்.

முனிவன் கதறினான்; அவ்விளங் கள்வனைப் பின் தொடர்ந்து வழிமறித்து, அப் பஞ்சமகாபாதகப் பட்டினத்திற்குச் செல்லவேண்டாவென்று கெஞ்சினான். மூன்று நாளளவும் இப்படியே இருவரும் நடந்தனர். இடையிடையே அவ் விளங்கள்வன், தன்னைப் பின் தொடரும் முனிவனை அருகழைத்து, "முத்துக்களையும் இரத்தினங்களையும் விட விலையுயர்ந்த கடவுளறிவை எனக்குத் தருவாயோ? எனக் கதனை நீ தருவாயாயின் நானும் அப் பஞ்சமகாபாதகப் பட்டினத்தை மிதிக்கமாட்டேன்" எனச் சாற்றுவான்.

அவ்வாறு அவன் சாற்றுந்தோறும் "இதுவொன்று தவிர என்னிடத்துள்ள மற்ற எல்லாவற்றையுந் தந்துவிடுவேன். இதனைத் தருவதோ எனக்கு நியாயமன்று" என முனிவன் எதிரியம்புவான்.

மூன்றாம்நாள் அந்திப்பொழுது சூழும்வேளையில், பஞ்சமகாபாதகப் பட்டினத்துவாயிலை நெருங்கினர். பெருஞ் சிரிப்பொலி அப் பட்டினத்தினின்று கேட்டது. இளங் கள்வனும் எதிர்சிரித்து, அவ்வாயிலைத் தாண்டி உட்புகக் காலெடுத்தான் அப்பொழுது நம் முனிவன் அவனுக்கு முன்னே ஓடிவந்து, "உன் கரங்களைக்கொண்டு என் கழுத்தினைத் தழுவிக்கொள், உன் காதினை என் வாயின் அருகு வைத்துக்கொள், கடவுளைப்பற்றி என்னிடத்து எஞ்சியுள்ள அவ்வறிவையும் உனக்குக் கொடுத்துவிடுகின்றேன்." என்றனன். அவ் விளைய கள்வனும் நின்றனன்.

தான் வைத்திருந்த அக் கடவுளறிவைத் தந்தபின் முனிவன் தரையிலே விழுந்து அழுதனன். பெரியதோர் இருள்சூழ்ந்து பட்டினவாயிலையும் இளங் கள்வனையும் அவன் காணாவகை மறைத்தது.

அவ்விடத்தே முனிவன் அழுதவண்ணமாய்க் கிடந்தபோது தன்னயல், பொன்னார் மேனியும் மின்னெறி சடையுமுடைய ஓர்உருவம் துளங்குவது உணர்ந்தனன். சோதிவடிவாய அவ்வுருவும் அவனை எழுப்பிநிறுத்தி, "இந்நாள்காறும் நீ கடவுளின் முழு அறிவையே பெற்றிருந்தாய். இன்றைக்கே நீ அக்கடவுளின் முழு அருளைப் பெற்றனை. பின் எற்றுக்கோ அழுகின்றாய்" என்று அவனைத் தழுவிக்கொண்டது.

தமிழ்ப்பாடம் 105.

வில்லிபாரதம்—உத்தியோகபருவம்.

[69-வது பக்கத் தொடர்ச்சி]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்

வயிரமெனுங் கடுநெருப்பை மிகமூட்டி
வளர்க்கினுயர் வரைக்கா டென்னச்
செயிரமரில் வெகுளிபொரச் சேரவிரு
திறத்தேமுஞ் சென்று மாள்வோம்
கயிரவமுந் தாமரையுங் கமழ்பழனக்
குருநாட்டிற் கலந்து வாழ
உயிரனையாய் சந்துபட வுரைத்தருளென்
றானறத்தி னுருவம் போல்வான்.

உங்கள் கருத்து யாது, என்று கேட்ட கண்ணனை நோக்கி, போரின்றி நாடுபெற உபாயம் கூறவேண்டும் என்று தருமன் சொல்லல்.

பதவுரை.

உயிர் அனையாய் - எங்களுக்கு உயிர் போன்ற கிருஷ்ணனே! வயிரம் எனும் - பகையாகிய இந்த, கடு நெருப்பை - கொடிய நெருப்பை, மிக - அதிகமாக, மூட்டி - மூட்டி, வளர்க்கின் - வளர்ப்போமானால், உயர் - உயர்ந்த, வரை - மலையிலுள்ள, காடு என்ன - காட்டைப்போல், செயிர் - குற்றமுடைய, அமரில் - யுத்தத்தில், வெகுளி - கோபத்துடன், பொர - போர்செய்து, இரு திறத்தேமும் - இரண்டு பக்கத்தாரும், சேர - சேர்ந்து, சென்று மாள்வோம்- போய் இறப்போம். (ஆகையால்)

கயிரவமும் - ஆம்பல் மலரும், தாமரையும் - தாமரை மலரும், கமழ் - சேர்ந்து மணக்கின்ற, பழனம் - வயல்களை உடைய, குருநாட்டில் - குருநாட்டில், கலந்து வாழ - (நாங்களும் துரியோதனாதியர்களும்) சேர்ந்து வாழும்படி, சந்து பட - எங்கள் இருவருக்கும் உள்ள பிளவு நெருங்கி நாங்கள் ஒன்றாகச் சேரும் வண்ணம், உரைத்து அருள்-சொல்லி அருள்வாயாக; என்றான் அறத்தின் உருவம்போல்வான்-என்று தருமமே ஓர் வடிவம் எடுத்துவந்ததை ஒத்த உதிட்டிரன் கூறினான்.

அரவுயர்த்தோ னுடன்மறுசூ தாடிநீர்வென்
றவக்கா லவன்றான் சொன்ன
விரதமொழி தவிராமல் வெங்கானம்
போய்மீண்டீர் வெய்யோ னுங்கள்

குருநிலத்திற் பாதியினிக் கொடாதிருந்தா
லாங்கவனைக் கொன்று போரி
லிருநிலத்தை யாளவினித் துணிவதே
கடனென்று னெம்பி ரானே. (6)

சமாதானம் செய்துவைப்பாய் என்றுரைத்த தருமனுக்குக் கிருஷ்ணன் கூறிய மறுமொழி.

பதவுரை.

அரவு - பாம்பினது வடிவம் எழுதியுள்ள கொடியை, உயர்த்தோனுடன் - தூக்கியுள்ளவனாகிய துரியோதனனுடன், மறு சூது ஆடி - இரண்டாம் முறை சூது ஆடி, நீர் வென்ற - நீங்கள் செயித்து அடிமையைத் தீர்த்துக்கொண்ட, அந்நாள் - அத்தினத்தில், அவன் தான் - அந்தத் துரியோதனன், சொன்ன - சொல்லியிருந்த, விரதமொழி - கட்டளையை, தவிராமல்-கடவாமல், வெம் கானம் - கொடிய காட்டுக்கு, போய் மீண்டீர் - போய்வந்தீர். (ஆகையால்)

வெய்யோன் - அந்தக் கொடியவன், குருநிலத்தில் உங்கள் பாதி - அந்தக் குருநிலத்தில் உங்களுக்கு உரிய பாதியை, இனிக் கொடாதிருந்தால் - இனியும் கொடுக்காமல் இருப்பானானால், (அங்கு-அசை) அவனை-அவனை, போரில் கொன்று - யுத்தத்தில் கொன்று, இருநிலத்தை - இப் பெரிய உலகத்தை (அல்லது இருவருடைய பாகத்தையும்) இனி - இதன்மேல், ஆள - நீங்களே ஆள, துணிவதே - நிச்சயங்கொள்வதே, கடன் - கடமையாகும்; என்றான் எம்பிரான்- என்று எமது இறைவனாகிய கண்ணன் கூறினான்.

குரவரையுங் கிளைஞரையுங் குலத்துரிய
துணைவரையுங் கொன்று போர்வென்
றரவநெடுங் கடலாடை யவனியெலாந்
தனியாளு மரசு தன்னிற்
கரவுறையு மனத்தாதை முனிக்குரைத்த
மொழிப்படியே கானந் தோறு
மிரவுபகற் பலமூல சாகநுகர்ந்
துயிர்வாழ்த லினிது நன்றே. (7)

போர்செய்து உங்கள்நாட்டைப் பெறுவதே தக்கது என்ற கிருஷ்ணனுக்குத் தருமன் எதிருரைத்தது.

பதவுரை

குரவரையும் - (பீஷ்மன் விதுரன் முதலிய) பெரியோர்களையும்; கிளைஞரையும் - (துரியோதனாதியர், சகுனி முதலிய) உறவினர்களையும்; குலத்து - நமது குலத்திற்கு, உரிய - உரியவர்களாகிய, துணைவரையும் - (கிருபன், துரோணன், அசுவத்தாமன் முதலிய) துணைவர்களையும், கொன்று - கொன்று, போர்- யுத்தத்தில், வென்று - செயித்து,

அரவம் - சப்தத்தைச் செய்கின்ற, நெடும்-பெரிய, கடல் - கடலை, ஆடை - ஆடையாக உடுத்திருக்கின்ற, அவனி எல்லாம் - இந்தப் பூமிமுழுவதும், தனி-நாம் தனியாக, ஆளும்-(ஆளவேண்டுமெனின், அவ்வாறு) ஆள்கின்ற, அரசு தன்னின் - அந்த அரசாட்சியைக் காட்டிலும்,

கரவு - வஞ்சனை, உறையும் - பொருந்திய, மனம்-மனத்தையுடைய, தாதை - எம் பெரிய தந்தையாகிய திருதராட்டிரன், முனிக்கு - சஞ்சய முனிவனிடத்தில், உரைத்த - சொல்லியனுப்பிய, மொழிப்படியே - (நன்னெறிக்குரிய) மொழியின்படியே,

கானம்தோறும் - காடுகளில், இரவுபகல் - இரவிலும் பகலிலும், பலம் - பழங்களையும், மூலம்-கிழங்குகளையும், சாகம் - தழைகளையும், நுகர்ந்து-தின்று, உயிர் வாழ்தல் - நாம் பிழைப்பது, இனிது நன்றே - மிகவும் நல்லது (என்பதற் கையமில்லை).

கோதிலா னிந்தமொழி கூறுதலு
மாமாயன் கூற லுற்றான்
மோதமருக் கிளைத்துநீர் மொய்த்தபெருங்
கானகத்தே முடுகிச் சென்றால்
பூதலத்தோ ரேசாரோ புகன்றபெரு
வஞ்சினமும் பொய்த்தி டாதோ
நீதியோ வெனவுரைத்தா னங்கதற்கு
நிகழ்தரும னிகழ்த்த லுற்றான். (8)

போர் செய்யாமற் பெற இயலாதாயின் அவ்வரசு வேண்டா வென்ற தருமனைக் கண்ணன் போரிற்குத் தூண்டுதல்.

பதவுரை.

கோது இல்லான் - குற்றம் இல்லாதவனாகிய தருமன், இந்தமொழி - இவ்விதமான வார்த்தைகளை, கூறுதலும் - சொல்லவே, மா மாயன் - பெரிய மாயனாகிய கண்ணன், கூறல் உற்றான்-பதில்கூறத் தொடங்கினவனாய்,

மோது - மோதுகின்ற, அமருக்கு - யுத்தத்தைச் செய்யாமல், இளைத்து - பின்னிட்டு, நீர் - நீங்கள், மொய்த்த - அடர்ந்த, பெரும் - பெரிய, கானகத்து- காட்டிற்குள்; முடுகிச் சென்றால் - புகுந்து ஒளிந்து கொண்டால், பூதலத்தோர்-இப் பூமியிலுள்ளவர்கள், ஏசாரோ - உங்களைப் பழித்து இகழமாட்டார்களா ! புகன்ற- (திரௌபதியைத் துகிலுரிந்த காலத்தில் நீங்கள்) விளம்பியுள்ள, பெரு - பெரிய, வஞ்சினமும் - சபதமும், பொய்த்திடாதோ - நிறைவேறாமல் பொய்யாகிவிடாதோ! நீதியோ - க்ஷத்திரியர்களுக்கு இது தருமம் ஆகுமோ! என உரைத்தான் - என்று சொன்னான்.

ஆங்கு - அப்பொழுது, அதற்கு - அம்மொழிகளுக்கு, நிகழ் - விளங்குகின்ற, தருமன்-தருமராஜன், நிகழ்த்தல் உற்றான்-(பின்வருமாறு) பதில் சொல்வானானான்.

விரிவுரை:—துகிலுரிந்த துச்சாதனனது இரத்தத்தை அள்ளிக்குடிக்கும்வரையில் தன்கைகளில் எடுத்து நீர் பருகுவதில்லை யென்று வீமனும், துரியோதனதியர் செத்து வீழ்கின்றவரையில் தன் கூந்தலை முடிப்பதில்லை என்று திரௌபதியும், இதுபோன்று ஒவ்வொன்று (தருமன் தவிர) பாண்டவர்களில் மற்றவரும் செய்துகொண்ட சபதங்கள் இங்குக் குறிக்கப் பட்டிருக்கின்றன.

இலக்கணம்.

நிலைமொழியிறுதி உகரமாயிருக்க, வருமொழிமுதலில் இடையினத்தைச் சேர்ந்த யகரமெய் வருமாயின், அவ்வுகரம் இகரமாகத் திரிந்து (சில முற்றிய லுகரங்கள் திரியாமலும்)புணர்கின்ற விதங்களை முன்னர்க் கண்டோம். இனி, உகர ஈறும் யகரமுதலுமாய்த் தொடர்வன அல்லாமல், மற்றபடி,

III.C. நிலைமொழியிறுதியில் உயிரும் வருமொழி முதலில் மெல்லின மெய்யேனும் இடையின மெய்யேனும் (அதாவது, இவ்வின உயிர்மெய் யெழுத்துக்கள்) வருமாயின் அவை எவ்வாறு புணரும் என்று பார்ப்போம்.

ங ஞ ண ந ம ன, என்னும் ஆறு மெல்லின மெய்களில் மொழிக்கு முதலில் வரக்கூடியன, ஞ ந ம என்னும் மூன்று எழுத்துக்களே. ய ர ல வ ழ ள என்னும் ஆறு இடையின மெய்களில் மொழிக்குமுதலில் வரக்கூடியன ய வ என்னும் இரண்டு எழுத்துக்கள்.

i. நிலைமொழியிறுதியில் உயிர் இருக்க, வருமொழி முதலில் ஞ ந ம ய வ என்னும் எழுத்துக்களாலாகிய எந்த உயிர்மெய் வரினும் அவை இயல்பாகப் புணரும்—அதாவது, எந்த எழுத்தும் தோன்றாது, திரியாது, கெடாது:—

வந்த + ஞெண்டு = வந்தஞெண்டு.
வேட்டை + நாய் = வேட்டைநாய்.
கொடி + மாடம் = கொடிமாடம்.
வெள்ளி + யானை = வெள்ளியானை.
தீ + வைத்தான் = தீவைத்தான்.

ii. தமிழில், நொ து என்று இரண்டு ஓரெழுத்தொருமொழிகள் இருக்கின்றன. நொ, என்றால் வருத்தப்படு, என்பது அர்த்தமாம். அவன் வறுமையால் நொந்தான், எனவருவது யாவரும் அறிவர். து என்பதற்கு, உண் என்பது அர்த்தம்.

இந்த, நொ து என்ற சொற்கள் (வருந்தக் கடவாய் உண்ணக்கடவாய் என்று கட்டளையிடுகின்ற பொருளில்) நிலைமொழியாக இருக்க, வருமொழி முதலில் ஞ ந ம ய வ என்னும் எழுத்துக்களில் எது வருமாயினும், இச்சொற்கள் புணரும்போது, ஞ ந ம ய வக்களில் எந்த மெய் எழுத்து வருகின்றதோ அந்தமெய் மிகும்.

து + ஞிமிறு = துஞ்ஞிமிறு = (வண்டே நீ உண்ணக் கடவாய்)
நொ + ஞமலி = நொஞ்ஞமலி = (நாயே நீ வருந்தக் கடவாய்)
து + நங்காய் = துந்நங்காய்
நொ + நிருப = நொந்நிருப
து + முனிவா = தும்முனிவா
நொ + மைந்தா = நொம்மைந்தா
து + யுவனே = துய்யுவனே
நொ + யோகி = நொய்யோகி
து + வீர = துவ்வீர
நொ + வேந்தே = நொவ்வேந்தே

இவ்வுதாரணங்களினால், வருமொழிமுதலில் எந்த மெய் வந்ததோ அந்தமெய் மிகுந்து சொற்கள் புணர்ந்திருப்பதைக் காணலாம்.

iii. பூ என்னும் ஓரெழுத்தொருமொழி நிலைமொழியாகவும், ந அல்லது ம என்னும் வரிசையைச் சேர்ந்த உயிர்மெய்யெழுத்து வருமொழி முதலாகவும் இருக்குமாயின், அந்த நகர மகர மெய்கள் மிகுந்தும் புணரலாம், மிகாமல் இயல்பாகவும் புணரலாம்.

பூ + நுனி = பூந்நுனி எனவும் வரலாம், அல்லது பூநுனி எனவும் வரலாம்.
பூ + முரி = பூம்முரி எனவும் வரலாம், அல்லது பூமுரி எனவும் வரலாம்.

iv. (ஐந்து, அழகு, கோழை என்பன, ஐ என்னும் ஓரெழுத் தொருமொழியின் பொருள்கள்) ஐ என்னும் ஓரெழுத்து ஒருமொழியாகிலும், அல்லது ஐயோடுகூடி, கை மை தை பை என்பனபோல் வரும் உயிர்மெய் ஓரெழுத் தொருமொழியாகிலும் நிலைமொழியாயிருக்க, வருமொழி முதலில் ஞ ந ம என்னும் மெல்லினமெய் வருமாயின், அந்த மெல்லினமெய் மிகும்.

ஐ + முகம் = ஐம்முகம்
ஐ + நெகிழ்ந்தது = ஐந்நெகிழ்ந்தது
கை + நீட்டினான் = கைந்நீட்டினான்
மை + மிளிர்ந்தது = மைம்மிளிர்ந்தது
பை + ஞெகிழ்ந்தது = பைஞ்ஞெகிழ்ந்தது
தை + மாதம் = தைம்மாதம்

v. நிலைமொழி ஐ, கை, மை போன்ற ஓரெழுத்தொரு மொழிகளில் ஒன்றாக இருக்க, வருமொழி முதலில்இடையினத்தைச்சேர்ந்த யகரம்வருமாயின், அந்தயகரமெய் மிகும்; வகரம்வருமாயின் அந்த வகர மெய்மிகாது.

ஐ + யாறு = ஐய்யாறு கை + யானை = கைய்யானை மை + யானை = மைய்யானை	} யகர மெய் மிகுந்தன.
ஐ + வேல் = ஐவேல் கை + விலை = கைவிலை மை + வரை = மைவரை	} வகர மெய் மிகவில்லை.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

6-ம் பத்து, 3-ம் சதகம்

[57-வது பக்கத் தொடர்ச்சி.]

8-ம் பாசுரம்.

வன்சரண்சுரர்க்காயசுரருக்குவெங்கூற்றமுமாய்த்
தன்சரண்நிழற்கீழுலகம்வைத்தும்வையாதுந்
தென்சரண்டிசைக்குத்திருவிண்ணகர்சேர்ந்தபிரா
னென்சரணென்கண்ணனென்னையாளுடையென்
[னப்பனே.

அவதாரிகை:-முன்னே சென்ற பாசுரத்தில் "வரங்கொள் சரண்" என்றதை விசாரித்தார். பகவான் ஸ்ரீ கிருஷ்ணன், திருவிண்ணகர் சேர்ந்தபிரான், தனக்குக் கண்போல் அருமையான இனியனென்றும், தன்னிடத்தில் ஸர்வவித பணிவிடைகளும் இனிதாய்ப் பெற்றுக்கொள்கின்றானென்றும் தான் அவனுக்கு ஆளாய் விட்டாரென்றும் இப்பாசுரத்தில் கூறுகின்றார்.

உரை:—தன்சரண் கீழ் உலகம் வைத்தும் வையாதும் சுரருக்கு வன் சரணாய் - ஸாது பிரகிருதிகளாகிய தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் திருடமான ரக்ஷகனாய், அவர்களைத் தன் திருப்பாத நிழலில் அமர்த்தியும், அசுரர்களை அமர்த்தாமலும், எனக்குக் கண்கள் போல்அருமையான ஞான ஒளியும் வெகு ரஸிகஇனியனும், ஆகி என்னைத் தன் கைங்கரியத்தில் அமர்த்திக் கொண்டவன் எனக்கு அஸாதாரண ஸ்வாமியானான்

9-ம் பாசுரம்.

[ப்
என்னப்பனெனக்காயிகுளாயென்னைப்பெற்றவளாய்
பொன்னப்பன்மணியப்பன்முத்தப்பனென்னப்பனு
[மாய்
மின்னப்பொன்மதிள்சூழ்திருவண்ணகர்சேர்ந்தவப்
[பன்
தன்னொப்பாரில்லப்பன்தந்தனன்தனதாள்நிழலே.

உரை.—"சுட்டுரைத்த நன்பொன் னொளியையும் அதிபிரகாசமான ரத்ந ஒளியையு முடைத்தான திருவுடம்பையுடையானுமாய் அழகுவாய்ந்தவனுய்த்தன்னொப்பார் அன்றிப்பயிருந்த திருவிண்ணகர் சேர்ந்தவப்பன் தன்னழகாலே என்னை வசீகரித்து எனக்கு ஸ்வாமியாய்த் தன்னுடைய ஸௌசீல்யத்தாலே பெற்ற தாயும் வளர்த்த தாயும் பண்ணக்கடவ அன்பையெல்லாம்பக்கலிலே பண்ணி அவனைப் பிரிந்ததினுல் எனக்குண்டான நிரவதிக மனவலின் தாபமெல்லாம் தீர்ந்துபோகும்படி வெப்பமெல்லாம் தீர்க்கும் குளிர் நிழல்போல உய்வில்லாப்பாபிகளைப் பிழைப்புமூட்டும் தன் திருவடிகளைத் தனக்குத் தந்தருளினுனென்கிறுர். —ஆறுயிரப்படி.

குறிப்பு:—இந்தத் திவ்விய ஸ்தலத்திலுள்ளவர்கள் "பொன்னப்பன்" "முத்தப்பன்" "மணியப்பன்" "தன்னொப்பாரில்லப்பன்" என்று திருநாமங்கள் படைத்த மூர்த்திகள் சந்நிதியிலேயே வெவ்வேறுதிருக்கோயில் காலவிசேஷத்தில்கொண்டிருந்தார்களென்றவதந்தி கூறுகிருர்கள். இதற்கு யாதொரு அத்தாக்ஷியுமில்லை. பாசுரமும் அங்ஙனே அறிவிக்கலானும்.

10-ம் பாசுரம்.

நிழல்வெய்யில்சிறுமைபெருமைகுறுமைநெடுமையு
சுழல்வனநிற்பனமற்றுமாயவையல்லனுமாய் [மாய்ச்
மழலைவண்டுவாழ்திருவிண்ணகர் மன்னுபிரான்
கழல்களன்றிமற்றோர்களைகணிலங்காண்மின்களே.

அவதாரிகை - கீழ்ப் பாசுரங்களில் பரஸ்பரம் இழிந்தவஸ்த்துக்களின் அகத்திருந்து பகவான் நடாத்துவானேயாகுலும் அவைகளின் மாசுமறு குற்றங்கள் முதலியவைகளில் அவன் தோய்ந்து ஸம்பந்தப்படுவதில்லைஎன்று சொல்லியாய்விட்டதே, பின்னும் இப்பாசுரத்தில் கூறுவானேன்? என்ருல்—ஆழ்வார் பகவானுடன் கலப்பேனல்லேன்என்று தீர்மானித்துத்தான் தனித்திருந்தபோழ்து தன்கருத்துமுழுதும் அழிந்து துயர்பட்டு இறந்துபடுபவர்போலாகிப் பிறகு அவனுடன் கலவி ஏற்பட்ட நிமித்தமாகத் தன் ஆத்ம ஜீவனத்தைத்திரும்பப்பெற்றவனுகஆகி ஆற்றல்மிகுந்து அவனை வணங்கிக்கலவிபாட ஏற்பட்டதைஉன்னித்துக் கவனித்தால் தனக்கு அவனே கதியென்றும் தாரக போஷக அநுபாவ்ய வஸ்துவென்றும், "உலகத்தீரே, நீங்கள் நிதர்சனமாய் அறிந்துகொள்ளலாம். காண்மின்" என்றும் உலகத்தவர்க்குக் கற்பிக்கிறுர். இப்பாசுரத்துக்கு உரையும் இதுவே.

பதக் குறிப்புக்கள்:—சுழல்வன - அசையும் ஜங்கமப்பொருள்கள்; நிற்பன - அசையாப் பொருள்கள். களைகண் - இரக்ஷிக்கும் வஸ்து.

11-ம் பாசுரம்

காண்மின்களுலகீரென்றுகண்முகப்பேநிமிர்த்த
தாளிணையன்றன்னைக்குருகூர்ச்சடகோபன்சொன்ன
வாணையாயிரத்துத்திருவிண்ணகர்ப்பத்தும்வல்லார்
கோணையின்றிவிண்ணோர்க்கென்றுமாவர்குரவர்களே

உரை:—சொன்ன வாணை = சொன்ன ஆணை = ஆஞ்ஞை-பகவானின் ஸங்கல்ப ரூபமான உத்திரவு. கோணை - விவாதம், மற்றொருகக்ஷிசொல்லித் தர்க்கித்தல். குரவர் - குருக்கள் அதாவது பூஜிக்க உரித்தானவர்.

அவதாரிகை:—சென்ற பாசுரத்தில், உலகத்தாரை அழைத்து "எனக்கு அவனே கதியென்பதை நீங்கள் கண்டுகொள்ளலாம்" என்றும் "அவனது திருப்பாதங்களை ஆச்ரயித்துப் பிழையுங்கோள்" என்றும் கற்பித்தார். இப்பாசுரத்தில் பகவானே தம் திருப்பாதங்களைத் திருவிக்கிரமாவதாரத்தில் ஸர்வருக்கும் உய்யும் நெறியென்று காட்டிக்கொடுத்ததை அருளிச்செய்கின்றுர்.

பொழிப்புரை:—ஆச்ரிதரும் அநாச்ரிதரும் எல்லாவரும் அறியும்படிகண்டு வாழுங்கோளென்று தம்திருவடிகளை ஒருவரும் கேட்காதிருப்பினும் கருணையால் உலகத்தார் கண்கள்முன்னுகத் திருவிக்கரமாவதாரத்தில் நிமிர்த்த வெம்பெருமானது ஸர்வலோக ஆஞைகையைச் சொன்ன இப்பத்தும் வல்லார் நித்தியம் பகவானை நேரில் கண்டு அநுபவிக்கும் ஸூரிகளுக்கும் பூஜ்ஜியராவார்கள்.

குறிப்பு:—விண்ணகரம் - வைகுண்டம் போல எம்பெருமான் வீற்றிருக்கும் ஸ்தலம். அவனை இங்குப் பஜிப்பதினுல் பக்தர்கள் தூய்மையடைவார்கள்.

மதுரைக் கோவை

[56-வது பக்கத் தொடர்ச்சி]

இணையுநக்கண்டவன் துணைவனுக்கிரங்கல்.

கல்லார நீழற் கடம்பா டவியிளங்
காவகத்து
நில்லாது நீரிங்கு வந்துநின் றுலெ
னினைவறிய
வல்லா னொருவன் வினையே னிடமும்
வடிவுஞ்சொன்ன
தெல்லா மறிந்தெங்ங னேயும்மை நாடு
மிளங்கொடியே. 61.

பாங்கன் தலைவியைக் காண்டல்.

சொல்வித் தகரத்தர் சொக்கர்தண் சாரலெந்
[1]தோன்றனெஞ்சைச்
செல்வித் தவரிவர் தாமல்ல வோசென்ற
நெஞ்சுருகப்
புல்வித்த காவுமிக் காவல்ல வோவென்
புகல்வதவர்
கல்விப் பரப்பிவர் கண்ணிரு கோடியிற்
கண்டனமே. 62.

பாங்கன் தலைவியை வியந்தல்.

செண்டாடல் வெற்பர் திருவால வாயெழிற்
செவ்விவிண்ட
தண்டா மரையிற் றிருவறிவே னண்ணல்
தண்டலையிற்
கண்டாசை பூணக் கொழுங்காவி யங்கட்
கடைகொடுத்த
வண்டாடு கோதைக் கெவர்நிக ராக
மதிப்பதுவே. 63.

பாங்கன் தலைவனை வியத்தல்.

கோனுத [2]நாணிடும் வெஞ்சிலை யார்சொக்கர்
கூடனெடுந்
தூணூர் புயத்தண்ண லாண்மைநன் றேபுடை
தூர்த்தடங்காப்
பூணூர வெற்பைக் கடந்தானு மந்தப்
பொருப்பிருக்குங்
காணு வெளியை யொருவனெவ் வாறு
கடந்தனனே. 64.

(பிரதி) 1. தோன்ற நெஞ்சைச்.

(பிரதி) 2. ணுணிடும்.

இகழ்ந்ததற் கிரங்கல்

அகழும் புரிசையுஞ் சூழால வாய
ரணிவரைநாம்
இகழுந் தகைமைய தோவண்ண லாண்மை
யிமையவரும்
புகழுந் திருவனை யார்கண்க ளாலிடும்
பூசல்வெள்ளம்
திகழும் பரிசல்கண் டாலென் படாதொரு
சிந்தையின்றே. 65.

பாங்கன் தலைவியைக் கண்டமை செப்பல்

கழைகிழிக் குங்களிற் றுர்கடம் பாடவிக்
கண்ணுதனுட்
டிழைகிழிக் குங்கொலை வேலண்ண லேவண்
டிரைக்குமலர்
மழைகிழிக் கும்பொங்கர் நின்றுன தாவி
மறுக்கங்கண்ட
குழைகிழிக் குங்கண்ணிக் கார்நிக ராமென்று
கூறுவதே. 66.

தலைவன் தலைவியை வியத்தல்

துளிகொண் டொழுகு மதுமாலை யஞ்சடைச்
சொக்கர்வெற்பிற்
கிளிகண்ட சொல்லியை நீகண்ட போதெழு
கிதவண்டு
களிகொண்ட வாச மலர்ப்புய லூடலர்
காவியிற்றண்
ணளிகண் டனையென்கி லோவமை யாதுன்
னதிசயமே. 67.

தலைவன் குறிவழிச் செல்லத் துணிதல்

சினவிற் கரத்தர் திருவால வாயர்
சிலம்பிற்கஞ்ச
மனையிற் புகுந்தெனி லும்நண்ப னேயிந்த
மாயஞ்செய்த
வினையிற் புருவத் திருப்பாவை செவ்வியை
மேவுதற்கே
நினைவிற்கு முன்செலு மேபுல்லு மேயன்பு
[நேர்] நெஞ்சமே. 68.

தலைவன் தலைவியை முகம்புகுதல்.

மந்தார மாலை மதுரேசர் வெற்பிலென்
மையனெஞ்சு
பந்தாட வந்துற வாடநிற் பீர்முகம்
பார்த்தொருவர்
சிந்தா குலமு மயர்வுங்கண் டாலொரு
தீங்கிளவி
தந்தாள வேனு மதுகாணும் பெண்மையுஞ்
சாயலுமே. 69.

கலந்துழி மகிழ்தல்.

தாழுஞ் சுருளிரு ளோதியங் காவிலுஞ்
சந்த்ரகலை
வாழுங் குவளை யினும்பெரி தாய்மது
ரேசர்வெற்பிற்
சூழுங் கலாப மயிலனை யாரல்குல்
தோய்ந்தலைந்து
வீழுங் கலாபமன் றோவின்ப வாரி
விளைவித்ததே. 70.

நலம்பாராட்டல்.

வம்புங் குவடும் பொருமிரு கோல
வரையும்வஞ்சிக்
கொம்பும் படவா வும்புகழ் வேன்சொக்கர்
கூடலளி
பம்புங் குழலி யனுராக போகத்திற்
பார்க்குமிரண்
டம்புந் தருவிர கோவடங் காதென்
[3]னறிவினுக்கே. 71.

பாங்கியோடு வருகென்றல்.

குனிவரும் பான்மதி யார்சொக்க நாயகர்
கூடற்செந்தேன்
கனிவரு காமக் களிமயி லேயிளங்
காவிடைநீர்
தனிவருந் தோறுந் தரியாத வாவி
தரிப்பதற்கிங்
கினிவரும் போது பிரியாது வாரு
மிருவருமே. 72.

ஆயத் துய்த்தல்

கந்துங் கழையும் பொருதிரு பாலுங்
கடைக்கணங்கி
சிந்துங் களிற்றர் திருவால வாயர்
சிலம்பில்வண்டுங்
கொந்துங் குழலுஞ் சுழலணங் கேமலர்
கொய்துமது
பந்துங் கழங்கும் பயிலாய வெள்ளம்
பயிலுகவே. 73.

தலைவி பாங்கியை யறிவித்தல்

விண்ணோக் கினுந்தெரி யாதபொன் மேனியிம்
மேனியென்று
மண்ணோக்கி யேத்திநிற் பார்மது ரேசர்
வரையினின்ற
பண்ணோக்கு மின்சொற் பரிபுரப் பாவை
பணிந்தகடைக்
கண்ணோக்கி நின்றுகண் டேன்வளர் காதற்
கரும்பினையே. 74.

(பிரதி) 3. றறிவினுக்கே.

பாங்கற் கூட்டம் முற்றும்.

கம்பராமாயணம்:—பதவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு; முதலியவைகளுடன் ஸ்ரீ. வை. மு. சடகோபராமாநுஜாசாரியார், சே. கிருஷ்ணமாசாரியார், வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரவர்களால் பதிப்பிக்கப்பெற்றவை. பால காண்டம் ரூ. 5. அயோத்தியா காண்டம் ரூ. 5. ஆரணிய காண்டம் ரூ. 4. கிஷ்கிந்தா காண்டம் ரூ. 4-8-0. சுந்தர காண்டம் ரூ. 5. யுத்த காண்டம் 2-பாகம் ரூ. 10. தபால் செலவு வேறு.
கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை.

அப்பர்

அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[53-வது பக்கத் தொடர்ச்சி]

3. முருகக் கடவுள் தமிழ்ப் புலவரென எண்ணப்பட்டமை

சூரபன்மன் இராஜதானியே புராதனமான தமிழ்நாடென்பதற்கேற்ப, நமது தமிழ்ச்சங்கங்களில் முதற் சங்கப் புலவரில் முருகக்கடவுள் ஒருவரென்று அறிகின்றோம்.*"தொடியோள் பௌவம்" என்பதற்கு அடியார்க்குநல்லார் விருத்தியுரை கூறுமிடத்துப் பின்வருமாறு மொழிகின்றார்:—

"தொடியோள்—பெண்பாற் பெயராற் குமரி பென்பதாயிற்று. ஆகவே, தென்பாற் கண்ணதோர் ஆற்றிற்குப் பெயராம். ஆனல், நெடியோன் குன்றமும் தொடியோள் நதியுமென்னது பௌவமு மென்றது என்னை யெனின், முதலூழி யிறுதிக்கண் தென்மதுரை யகத்துத் தலைச்சங்கத்து அகத்தியனரும்,$ இறையனரும் குமரவேளும், முரஞ்சியூர் முடிநாக ராயரும்; நிதியின்கிழவனும் † என்றிவ ருள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத் தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும், முதுநாரையும், முது குருகும், களரியாவிரையு முள்ளிட்டவற்றைப் புனைந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு இரீயினர் காய்சின வழுதிமுதற் கடுங்கோ னீறு யுள்ளார் எண்பத்தொன்பதின்மர். அவருள் கவியரங்கேறினர் எழுவர் ‡ பாண்டியருள் ஒருவன் சயமா கீர்த்தியனகிய நிலந்தரு திருவிற் பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீயினன். அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னு மாற்றிற்கும் குமரியென்னு மாற்றிற்குமிடையே எழுநூற்றுக் காவதவாறும் இவற்றின் நீர் மலிவானென மலிந்த ஏழ் தெங்கநாடும், ஏழ் மதுரைநாடும், ஏழ் முன்பாலை நாடும், ஏழ் பின்பாலை நாடும், ஏழ் குன்றநாடும், ஏழ் குணக்கரைநாடும், ஏழ் குறும்பனை நாடுமென்னும் இந்த நாற்பத்தொன்பதுநாடும் குமரி கொல்ல முதலிய பன்மலை நாடும், காடும், நதியும், பதியும், தடநீர்க் குமரி வடபெருங் கோட்டின் காறும் கடல்கொண் டொழிதலாற் § குமரியாகிய பௌவ மென்று ரென்றுணர்க."

தமிழ்நாட்டில் மதுரைக்குவடக்கிலுள்ள சிறுமலைக்குச் சற்றுத் தூரத்தில் சரவணப்பொய்கை யிருந்தது என்று சமண நூலும் கூறக்காணலாம். அச்சரவணப் பொய்கையில் குளித்தவர் இந்திரன் அருளிய தமிழ் ஐந்திர மென்னும் இலக்கணத்தில் வல்லவ ராவரென்று சிலப்பதிகாரம் கூறுவதால், தமிழைத் தருகின்ற மகிமை சரவணப் பொய்கைக்கு உண்டென்பது புறச்சமயத்தோரும் கொண்டிருந்த நம்பிக்கை என்பது வெளிப்படை:—

திருமால் குன்றத்துச்† செல்குவி ராயிற்
பெருமால் கொடுக்கும் பிலமுண் டாங்கு
விண்ணோ ரேத்தும் வியத்தகு மரபிற்
புண்ணிய சரவணம் பவகா ரணியோ
டிட்ட சித்தி யெனும்பெயர் போகி
விட்டு நீங்கா விளங்கிய பொய்கை
முட்டாச் சிறப்பின் மூன்றுள ஆங்குப
புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்
விண்ணவர் கோமான் விழுநூ லெய்துவிர்

சிலப்பதிகாரம் - காடுகாண்காதை 91 - 99.

என்பது காண்க.

இவ்வாறு தமிழ்நாடெங்கும் பண்டைக் காலத்தில் முருகக்கடவுளின் வழிபாடு நிறைந்திருந்தது ‡. மேற்குறித்திருக்கின்ற பெருமால் கொடுக்கும் பிலத்தைப் பற்றி வால்மீகி கிஷ்கிந்தாகாண்டத்தில் சர்க்கம் 50, 51-ல் பாடியிருக்கின்றார். இதை ரிக்ஷபிலமென்றும், இதில் ஹேமை என்பவள் சுயம்பிரபை என்னும்தோழியுடன் இருந்ததாகவும் கூறுவார்.

ஆகையால் சரவணபவன் முதலில் தமிழ்நாட்டிலே பிறந்து வளர்ந்த ஒருகடவுள் என்பது விளங்கும். சரவணப் பொய்கை, பவகாரணி, இஷ்டசித்தி என்னும் பெயருடைய மூன்றுகுளங்கள் பல சிவஸ்தலங்களில் அமைக்கப்பட்டிருப்பதால், அக்காலத்தி லவற்றைச் சனங்கள் எவ்வளவு கொண்டாடினரென்பதும் அநுமானிக்கலாம். சீகாழிக்கு அருகில் (சோழ நாட்டில்) திருவெண்காட்டில் இவ்வகை முக்குளம் அமைக்கப்பெற்று அவற்றைத் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் விசேடச் சிறப்புடன் புகழ்வதும்*காணலாம். அவர் பாசுரத்தைக்கடைபிடித்து மெய்கண்டதேவரது தாய் தந்தையர் அங்குச்சென்று மூழ்கி, அச்சந்தான் குரவரைப் பெற்றதாகவும் சரித்திரம் கூறும் †. ஆகையால் தமிழ்நாட்டிலுள்ள சிவஸ்தலம், அல்லது சுப்ரமண்ய ஸ்தலம் எங்கும் சரவணப் பொய்கை அமைக்கப்பட்டிருப்பது இன்றும் காணலாம்.

ஆகையால் சூரபன்மனை யழிக்கவந்த திருவுருவமே தமிழையும் வளர்க்க வந்ததென்று மேலோர்கண்டார். இதை அருணகிரிநாதர் திருப்புகழில்,

தலைவலை யத்துத் தரம்பெ றும்பல
புலவர்ம திக்கச் சிகண்டி குன்றெறி
தருமயில் செச்சைப் புயங்க யங்குற வஞ்சியோடு
தமனிய முத்துச் சதங்கை கிண்கிணி
தழுவிய செக்கச் சிவந்த பங்கய [புகாளப்
சரவணமும் வைத்துப் பெரும் ப்ரபந்தம் விளம்
புலவனே னத்தத் துவந்த ரங்தேரி
தலைவனெ னத்தக் கறஞ்செ யுங்குண
புருஷனெனப்பொற்பதந்தருஞ்சனனம்பெறுதோ

என்பது காண்க.

* நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமுந்
தமிழ்வரம் பறுத்த தண்புன னன்னாட்டு"
சிலப்பதிகாரம்—வேனிற்காதை 1 - 2.

$ குமரவேள் தமிழ் நாட்டுக்கு வருவதன் முன்னரே, கயிலாயத்தினின்று அகத்தியர் தென்னாட்டுக்கு வந்ததாகக் கந்தபுராணம் கூறும்.

† நிதியின் கிழவன்-குபேரன். இவன் இராவணனுக்கு முன்னர் இலங்கையை ஆண்டானென்று வால்மீகிராமாயணத்தில் காணலாம்.

‡ ஏனையோர் காலம், யுத்தமயமாய் இலக்கிய முதலிய கல்விக் கலைகளுக்கு ஓய்வுதாராத அரசியல் போலும்.

§ வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி
சிலப்பதிகாரம் - காடுகாண் காதை 18 - 22.

† திருமால் குன்றம் - அழகர் திருமலை.

‡ அருணகிரிநாதர் திருப்புகழில் கச்சபாலயம்என்னும் பாகத்தில், பின்வருமாறு பாடுவது காண்க:—

தேசி றுட்டகிட் ரே கோதுடைச் சூரை
வெட்டியெட் டாசையேழ் புவித்
தேவர் முத்தர்கட் கேதமேதவிர்த் தருள்வோனே!
சீர்ப டைத்தழற் சூலமான்மழுப்
பாணிவித் திருப்பாத னேர்புறச்
சேர்தி கழப்புகழ் பாவை யீனபொற் குருநாதா!
காசி முத்தமிழ்க் கூட லேழ்மலை
கோவபத்தியிம் கான நான்மறைக்
காடுபொற்கிரிக் காழி யாநூர் பொற் புலிவேளூர்
காள வத்தியப் பால்சி ராமலை தேச
முற்றழப் பூசை மேவுநற்
காம கச்சிரச் சாலை மேவுபோற் பெருமானே!

* பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினே டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவென்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே
சம்பந்தர்—திருவெண்காடு - பண் - சீகாமரம் - 2.

† சுவாமிநாத பண்டிதர் தலமுறை தேவாரப் பதிப்பு, பக்கம் 48-ல் காண்க.

சூளாமணி

[52-வது பக்கத் தொடர்ச்சி]

கூடற்புறத்தோ, சங்கு உடைந்தாற்போல மடலவிழ்ந்திருக்கும் வெண்டாழம் பூக்களும், மிக்கஇருட் செறிவு வயிறுவெடித்து நின்றாற்போல மலர்ந்திருக்கின்ற பெரியநெய்தற்பூக்களும், மகளிரின் ஓலைத்தோடு கீழ்வீழ்ந்து சுருள்கள் அவிழ்ந்து வளையவளைய அகல விரிந்தாற்போல இதழ்கள் சுற்றிலும் விரிந்து மலர்ந்த தாமரைப்பூவும், வானநாட்டுக் கற்பகக்காடானதுஇக் கானலைக்கண்டு தோற்றுப்போனதைக் காட்டி நிற்பன போன்று செருக்கொடும் திகழ்கின்றன.

ஒருயிர்ப் பொருளாம் மரம் செடி கொடி என்றவற்றின் பின்னே, மேலே பறந்துவரும்பறவைகள் நம்கண்ணுக்கெதிரேதோன்றுகின்றன. வானகத்தே அசைந்து சென்றே மழைபொழியும் கறுத்துநீண்ட முகிற்கூட்டம் குமுறும்போதெல்லாம், அம் முழக்கைக் கேட்டுக் களித்த பெரிய மயில்கள், பொருதுகளைத்த குறவர்களும்விலங்குகளும் இளைப்பும்நோயுந்தீர்ந்துஇனிது வாழும்படியாக மருத்துக்காற்றுஎழுவதைப்போலத் தன்தோகைமேல் மழைக்காலத்துக்குளிர்ந்தகாற்றுப் பட்டுப்போவதால் நீலஆலவட்டமென விரிந்தசைந்து ஒளிவீசுகின்ற தோகையை விரித்துநின்று அம் முகிலே போல அசைந்து ஆடி அகவுகின்றன.

முல்லைநிலத்தோ இளைய கொன்றையந்தலைவனும், அவனைத்தழுவி நாணத்தால் நிலன்நோக்கி மெல்ல மெல்ல நகும் முல்லைத்தலைவியும் கீழே உதிர்த்த பூப்பொடிகளைத் தம்மீது செறியக்கொண்ட வண்டுகள் மொய்த்துநின்று அவ் வியற்கைமணத்திற் கோர் இன்னியமே என மகிழ்வுடன் முரன்று ஒலிக்கின்றநிறைந்த மணல்மேடுகளின்மீது புதுமழை பொழிந்ததால் குளிர்ந்த மணலைத் தம்மியல்புக்கேற்பக் கிண்டி இரை தேடும் இளஞ் சேவற்கோழிகள் அக் கொடிமரக் காதலர்கள் தந்த விருந்தெனப் பொலியும் இரை கிட்டியதும்தம்முடைய தொழிலில் செருக்குற்று நின்று, தம் திறமையையும் அழகையும் கண்டு தமது பேடைகள் களித்து அப் புது விருந்தையும் இனிது அருந்தி தம்மைத்தழுவவேண்டிக்காதற்குறிப்போடும்பேடையின் பசிக்கிரங்கும் ஆர்வத்தோடும் தம் கழுத்தைவளைத்து அழகுபட அவற்றை நோக்கி நிற்கின்றன.

கழனிப்புறத்திலுள்ள நீர்நிலைகளிலே வண்டுகளும் கள்ளும் நிறைந்த செந்தாமரைமலர்கள் காடாகப் பூத்துக்கிடக்கின்றன. அங்கேபுள்ளினங்கள் இரைதேடிப் பறந்துகொண்டிருக்கின்றன. அ... தேடி நீரைக்குத்தவரும்போது, நீர்நின்றும் துள்ளியெழுந்த மீன் அப்புட்களின் வாயினுள்ளே புகுந்து துன்னுதலின் வருத்தமின்றி இரைபெற்று அவ்விடத்தைவிட்டகலாது இன்பமிகுதியால் ஒலிசெய்து நிற்கின்றன. மீட்டும் மீட்டும் நீரைக் குத்திக் குத்தி எழுகின்றன. மீனைப் பெறுதபோதும்தாமரையினின்றும் பெருகிய தேன் வாய்க்குள் புகுந்து தித்தித்தலின் 'மீன் அகப்படவில்லையே' என்ற வருத்தமின்றி அந் நீர்நிலையைப் பிரியாமல் ஆரவாரித்து நிற்கின்றன.

தாமரையின் மெல்லிய அடியையும் இளவிதழையும் தின்று களிக்கின்ற அன்னம், அவை தெவிட்டிப் போதலால், வெள்ளிய முளையோடு கூடியிருத்தலின், பசுந்தாமரைச் செடியின் மெல்லிய சுருளையும், முள்ளோடு கூடியிருத்தலின் அதன் அடியையும் வெறுத்துத் தாமரையினும் மெல்லிய பொருளை நாடி நீரிற் குதித்து, உள்நின்றும் முளைத்தெழுவதுபோல மேலெழுந்து நீரைக் குடைந்து கலக்குதலால், பூக்களின்நின்றும் வழிதலாலே அக்கழியில் தேனும் முளைவிட்டுக் கொடியாகப் பரவுதல் போலத் தோன்றுகின்றது.

பறவைகளின் களிப்பைக் கண்ட நம்மெதிர் விலங்குகளின் விளையாட்டும் நிகழலாகின்றது. மலையின்மேலுயர்ந்த சந்தனமரங்கள் அடர்ந்த சாரலிலே, பெரிய துதிக்கையையுடைய யானைகள், தம்முடைய பிடிகள் தம்மீது மொய்க்கின்ற வண்டுகளை, அருகே வளர்ந்த காந்தாட்பூக் குலைகொண்டு ஓச்சி, மருங்கே காதல் வழிபாடுசெய்து நின்றாட்ட, இனிதே உண்டு உலகை மறந்து உறங்குகின்றன.

மாலை கோத்தாற்போலப் பூக்கும் கொன்றைப் பூவினின்றும் துளித்துளியாக விழும் குளிர்ந்த தேனிலே தோய்த்தெடுத்தாற்போல மூழ்கிப் புதுமழை பொழிந்ததும் அழகோடு துளிர்த்து விளங்கும் மெல்லிய இளம் புற்களையும் இளந்தளிர்களையும் மானினங்கள் கறிக்குந்தோறும் ஒன்றோடொன்று மெல்ல விளையாட்டாக முட்டிக்கொண்டே போர்புரிகின்றன ஈதோ இப்பூக்கள் நிறைந்து குளிர்ந்த முல்லைநிலத்தில்.

குளங்களிலே இலையடர்ந்த குவளைகள் பூ நிறைந்து விளங்குகின்றன. அவற்றை மேய்ந்துகொண்டே போய்க் கரிய எருமை ஓரிடத்தே நின்று அசைபோடுகின்றது. அதன் கவுளின்நின்றும், குவளைப் பூக்களின்

199155

தேனுனது மெல்லுந்தோறும் இருபுறத்தும் வழிகிறது. கீழேநீரில் துள்ளும் மீன்கள் இதன்மடியைத் தாக்குகின்றன. கன்றென எண்ணி அவ்வெருமை பாலைச் சொரிகிறது. அந்தப் பாலும் நீர்மட்டத்திற்குள்ளேயே ஒழுகிப் பரவுகிறது. அம் மருதநிலத்துப் பறவைகள் நீரில் குடைந்து உள்ளே முழுகும்போது அப்பாலைச் சுவைக்கின்றன. அச்சுவையே பின்னும் விரும்பிப் பன்முறையும் அந்நீரை அலைத்து நிற்கின்றன அப்பறவைகள். அத்தகைய நீர்வளம் மிக்கது அந்தக் கழனிப்புறம்.

கடற்புறக் கழியோரத்திலே முதலைமாவானது கெண்டைமீன் சினைகளை மேய்ந்து செருக்கிச்சென்று தாமரை வளர்ந்திருக்கும் துறையிலே தங்குகிறது. வண்டல் நிறைந்த கடற்கரையிலே கூட்டமாக உலவும் பெரிய சுறுவினை இம்முதலை மிகச்செருக்கி மிறைத்துப் பார்த்து நிற்கின்றது. அந்நாட்டின் செருக்கு இருந்தபடி அது.

விலங்கினும் உயர்ந்த ஆறறிவு படைத்த மக்களது உழைப்பால் உண்டான நாட்டு வளப்பமே முடிந்த முடிபாக நம்மெதிரே தோன்றுகின்றது. கற்களிடையே கணுக்களோடு நிலைநிற்கும் மூங்கிலின் நெற்கதிர்க் கற்றையும், கல்லில்லாத நிலத்திலே வளரும் நீண்ட தினைக்கதிர்ச் செல்வமும், மற்றும் கணக்கின்றி ஆங்கே விளைவனவற்றின் செறிவும், அம் மலையிலே வாழும் உயிர்களனைத்தும் 'குந்தித் தின்றால் குன்றும் கரையும்'' என்பதற்கு மாறாக உண்ண உண்ணக் குறையாது ஓங்கி உயர்ந்துகொண்டே செல்கின்றன.

முற்றிப் பிளந்த காய்களோடு விளங்கும் பேரெட் செடியும், விளக்கமாகத் தோன்றும் பூங்கொத்துக்களோடும் கூடிக் காயின்சுமையால் தாழ்ந்துகிடக்கும் குளிர்ந்த அவரைக்கொடியும், பயிர்முற்றும் நிறையச் சுற்றிக் காய்த்து நிறையும் துவரையும் வரகும் என்ற இவைஎல்லாம் தமக்கு இருக்க இடம்பெறவேண்டி ஒன்றோடொன்று மிக நெருங்கி நிற்பனபோன்றன அம் முல்லைநிலத்திலே.

இடமகன்ற மருதநிலத்திலே, மிகவுயர்ந்தெழுந்து பெரியவாய்த் திரண்ட கரும்புவேலிக்குள்ளே, தோட்டங்களோடு கலந்த உள்ளிடத்திலே, கற்றையாகக் காய்ந்த நெற்காடு விளங்குகிறது.

குளிர்ந்த கடனுட்டிடத்தோ, சங்கு முத்து, தாழ்ந்து செல்லும் இப்பி தென்னங்குலையி லூறிய கள், பிறநாட்டிலிருந்து கப்பலில் ஏறிவரும் செல்வப் பொருள்கள், நீண்ட அக்கடலிலேயே படும் பொருள்கள் இவையனைத்தும் அந்நாட்டு வருவாயாம்.

[நாடென்ப நாடாவளத்தன. மலைபடு பொருளும் கடல்படுபொருளும் காடுபடு பொருளும் கழனிபடு பொருளும் அந்நாட்டில் கிடைத்தல் வேண்டும். அவ்வாறு இந்நாட்டில் இருத்தலைக் கண்டோம். ஆனால் கடல்படுபொருள் ஓரிடத்திலும் மலைபடுபொருள் அவ்விடத்திலிருந்து பலநூறு கல் தொலைவிலும் கிடைக்குமாயின் பயனில்லையன்றோ? ஓரே இடத்தில் அவையனைத்தும் ஒருங்கேகிடைப்பதன்றோ சிறப்பாகும். அங்ஙனம்கிடைக்கும்படியாக நானிலமும் ஒன்றற்கொன்று மிக அணித்தாக இருப்பதையும் தோலாமொழித் தேவருடைய புனைந்துரையுலகத்தே காண்கிறோம்.]

ஈதோ மலையில் வாழ்கின்ற குறத்தியர்கள் காக்கும் தினைப்புனத் தருகே பூத்துநிற்கும் குறிஞ்சிப் பூவைக் கொய்து கூந்தலிற் செருகிக்கொண்டு தெருவே வந்து நெய் விற்பதால் முல்லைநிலத்து இடைப் பெண்களின் கூந்தலிலே அப்பூமணம் வீசுகிறது. மடமை வாய்ந்த மருதநிலக் களத்துப் பெண்கள் களைபிடுங்கி எறிந்த குவளைகளை, அருகே கடற்கரைத் தோட்டத்தே குந்தித் தொடுத்த மாலைகள் பொலியும் பரதவரது கூந்தலில் காண்கிறோம். இப்பரதவர்கள் கொட்டும் சிறுபறையையே இசைக்கருவியாகக் கொண்டு, தமது கருத்திற்கேற்பக் கையை அசைத்துக் காட்டுவதில்வல்லகூத்தர்கள் (புலவர் = கூத்தர்கள்—பிங்கலந்தை) உண்டாட்டாடினபின் குரவைக்கூத் தாடுகின்றனர். அக்கூத்துக்கு வந்த இசைவாணரேபோல, அருகே முல்லைநிலத்து, ஒரு காலை நேரே ஊன்றி ஒரு காலை வளைத்து நின்று ஆவினம் மகிழக் கொன்றைக் குழலூதும் கோவலர்களது இன்னிசையிலீடுபட்டு, அயலில் மலைமேலே உலவும் நீண்ட அசுணமா உறங்குகின்றது.

வண்டுகள் கூட்டங்கூட்டமாக மொய்த்தலால் அச்சுமையைப் பொறுக்கமாட்டாமல் நைந்து வளையும் குறிஞ்சிநிலத்து மௌவற்கொடிப் பந்தரும் முல்லைநிலத்தின்கண் கார்காலத்தில் பூக்கும்முல்லைக்கொடியும் மருதநிலத்துப் பூங்காவனத்தே மலரும் மல்லிகைப் பூங்கொடியும், கடற்கரைத் தோட்டத்தே பரந்து தவழும் ஞாழல் (மல்லிகை போன்றது) கொடியுமாக வெண்பூக்கள் பூத்த கொடிகள் நறுமணங்கமழ விளங்குகின்ற நிலையில், அவற்றின் தூய தன்மையாலும், பொலிவாலும், நறுநாற்றத்தாலும் நானிலவளனும் ஓரிடத்தே அமைந்துகிடப்பதாலும் தூய துறக்கமேபோல விளங்குகிறது அந்த நாடு.

மலைமீது வேட்டையாடி வாழ்ந்தோர் பின்னர்க்காடுகளில் கன்றுகாலிகளை வளர்த்துப் பாலையுண்டு முன்னேறிக் கழனிகளை யுழுதுண்டு உயர்ந்து, பின்னே கடலைக் கடக்கக் கப்பலும் இயற்றி இந்நாளைய ஆங்கிலேயரைப்போலக் கப்பற்படைகள்கொண்டு உலகப் பொருள்களை ஒருங்கே கொண்டு இன்பந் துய்த்து இவ்வுலகை யாள்கின்றனராம். முன்னேற்ற முறை இவ்வாறு அங்கு அமைந்திருப்பதைச் சுட்டவே தோலாமொழித் தேவர் குறிஞ்சி, முல்லை மருதம் நெய்தல் என முறைசெய்து புனைந்துரைக்கின்றார் போலும். பொருள்களைப்புனைந்திருக்கும்போதும், முன்னேற்ற முறைமையை மறவாமல் ஓருயிர்ப் பொருள்கள், பறவைகள், விலங்குகள், மக்கள் என்று அமைத்திருத்தல் காண்க. மக்கள் மக்களாவது தம் செய்கைத் திறத்தாலேயே ஆதலின் மக்களைச் சுட்ட வந்தார். அவர்களது உழைப்பால் உண்டாகும் வருவாயைப் புனைந்துரைக்கும் வழியே அவ்வருவாயை உண்டுபண்ணிய மக்களையும் குறிப்பாகச் சுட்டிச் செல்கின்றார். பின்னர், நானிலப்பொருளும் எங்குங்கிடப்பதையும் காட்டி முடிவாக மக்களினும் உயர்ந்த கடவுணிலையைச் சுட்டிக் காட்டவேண்டி இயற்கை யன்னையின் இயைபினையே கொடிகளாகப் புனைந்துரைத்து முனைப்பற்று இயற்கை யன்னையின் மடிமீது தவழ்ந்து அதன்வழி நின்று இன்பந் துய்த்தலே துறக்கம் எனக் குறிப்பாகக் கூறி முடிக்கின்றார்.

நாட்டுப்படலம் முற்றிற்று

ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

காஞ்சீபுரம் ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி ஸ்தோத்திரங்கள்

[60-வது பக்கத் தொடர்ச்சி]

4. இராகம்—பலஹம்ஸ.] [தாளம்—ஆதி.

பல்லவி

பருல வேடலேனு - பதித பாவனுடா (பரு)

அநுபல்லவி

கரிவரதா நீவே - கடாக்ஷமுதோ ப்ரோவுமு (பரு)

சரணம்

அமரவர நீது நாமாதிஶயம்பே ஜீவ -
நமனே யுந்நாநு ஸ்ரீ - த்யாகராஜ விநுத (பரு)

பொருள்.

பதித பாவனுடா - பதிதபாவனுன எம்பெருமானே! பருலவேடலேனு - இதர தெய்வங்களைத் தொழமாட்டேன்.

கரிவரதா - கஜேந்திராழ்வானுக்கு வரத்தையளித்தவனே! நீவே-நீயே, கடாக்ஷமுதோ - கடைக்கண் நோக்கத்தோடு, ப்ரோவுமு - (என்னைக்) காப்பாற்று.

அமரவர - தேவர்களிற் சிறந்தவனே, ஸ்ரீத்யாகராஜ விநுத - ஸ்ரீதியாகராஜனுற் கொண்டாடப்பட்டவனே; நீது - உன்னுடைய, நாமாதிசயம்பே - திருநாம விசேஷங்களே, ஜீவனமுஅநே - ஜீவனமென்றே, (அதாவது உன்னைப்பற்றிய நாமஸங்கீர்த்தனமே எனது உயிருக்கு ஆதாரமென்றே), உந்நானு - நான் இருக்கிறேன். (ஆதலால் என்னைக் காப்பாற்று).

குறிப்பு:—கரிவரதன் என்பது காஞ்சியிற் கோயில் கொண்ட வரதராஜப் பெருமானுடைய சிறப்புத் திருநாமமாகு மென்பது இங்கு நோக்கத் தக்கது.

பலஹம்ஸ ராக லக்ஷணம்

இந்த இராகம், 72 மேளகர்த்தா முறையின்படி 28 வது கர்த்தாராகமான ஹரிகாம்போஜியில் ஜன்யம். ஔடவ வக்ர ஸம்பூர்ண ராகம். ஆரோஹணத்தில் சதுச்ருதி தைவதத்தை ஊன்றிப்பிடித்துப் பாடுவதாலும், "பதநிதபமா" "பமாபரீ" முதலிய கமகப் பிரயோகங்களாலும் 'ரீமாகாஸா' என்ற பிரயோகத்தை வளைவாகப் பிடிப்பதனாலும் இந்த ராகத்துக்கு விசேஷ ரஞ்சகம் ஏற்படுகின்றது. மற்றும்இதன் விசேஷஸஞ்சாரங்கள் கீத கீர்த்தனாதிகளை யாராய்வதனால் மட்டுமே புலனாகும். எப்போதும் பாடத்தக்கது.

ஆரோஹணம்:—ஸரிமபதஸ்.
அவரோஹணம்—ஸ்நிதபமரிமகஸ.

ஸ்வர ஸாஹித்யம்.

ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.

; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.

| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.

|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.

* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.

ஸரிகம— மேற்படி ஸம்ஜ்ஞையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.

பதநீ—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

ஸ்ரீக்ம்—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

[குறிப்பு:—இந்தக் கீர்த்தனத்தை மிகவும் சவுக்க காலத்திற் பாட வேண்டும்.]

பல்லவி

; ; ; * ரீமா பாதா ; ஸ்ா ; ; நிதபமரீ ; ; | ; ; ; — ரீமா காஸா ; | ரீ ; ; ; — மகரீ — மகஸா ||
; ; ; * பரு ல வே ; ட ; ; லே...னு ; ; | ; ; ; — ப தி த பா ; | · ; ; ; — வ . . — நு . . ||

நீதாஸா * ரீமா பாதா ; ஸ்ா பதஸ்ா-நிதபமரீ ; ; | ; ; ; — ரீமா காஸா ; | ரீ ; ; ; — மகரீ — மகஸா ||
· · ட * பரு ல வே ; ட . . . -லே...னு ; ; | ; ; ; — ப தி த பா ; | · ; ; ; — வ . . — நு . . ||

நீதாஸா * ரீமா பாதா ; ஸ்ரிம்க்ஸ்ா நிதபமரீ ; ; | ; ; ; — ரீமா காஸா ; | ரீ ; ; ; — மகரீ — மகஸா ||
· · ட * பரு ல வே ; ட . . . . லே...னு ; ; | ; ; ; — ப தி த பா ; | · ; ; ; — வ . . — னு . . ||

நீதாஸா *
· · ட * (பருல)

அநுபல்லவி

; ; ; * நீதா பாமா ; தா ; ; ; ; — பாதா ; | ஸ்ா ; ; ;— ; ; ; ; | ; ; ; ; — ; ; ; ; ||
; ; ; * க ரி வ ர ; தா ; ; ; ; — நீவே ; | · ; ; ;— ; ; ; ; | ; ; ; ; — ; ; ; ; ||

; ; ; * நீதா பாமா ; தா ; ; ; ; — பதஸ்ாதா | ஸ்ா ; ; —நீதா பாமா; | தா ; ; ; ; — பத ஸ்ாதா ||
; ; ; * க ரி வ ர ; தா ; ; ; ; — நீ.வே ; | · ; ; — க ரி வ ர ; | தா ; ; ; ; — நீ . வே . ||

ஸ்ா; ; * நீதா பாமா ;பதநித தபமா; பதஸ்ாதா | ஸ்ா ; —ஸ்ாரீ;ம்ாக்ாஸ்ா | ரீ ; ஸ்ா ; நீதா பாமா ||
; ; ; * க ரி வ ர ; தா . . . . . . ; நீ . .வே | · ; — க . ; டா . க்ஷ | மு ; தோ ; ப்ரோ . வு. ||

ரிமகாஸா *
மு . . . * (பருல)

சரணம்

; ; * பாமா ; பாரீ ; மாபாதா ; பாமாபா ; | ; ; — பா ; தாஸ்ாஸ்ா; | பாதாஸ்ா-தாஸ்ா ; ஸ்ா; ||
; ; * அ ம ; ர வ ; ர . ஙீ ; து . நா ; | ; ; — மா ; தி ச யம் ; | பே . . - . . : . ; ||

; ; * பாமா ; பாரீ ; மாபாதா; பதநிதபமம | பா ; — பா ; தாஸ்ாஸ்ா; | பாதாஸ்ாதாஸ்ா ; ஸ்ா ; ||
; ; * அ ம ; ர வ ; ர . ஙீ ; து . . . . . . | நா ; — மா ; தி சயம் ; | பே . . . ஜீ ; வ ; ||

; ; * ஸ்ா ரீ ; ரிஸ்நீதா — பாதாஸ்ாரீ-ம்ாக்ாஸ்ா; | ; ; —ஸ்ாரீ ; ம்ாக்ாஸ்ா | ரீ; ஸ்ா ; — நீதாபாமா ||
; ; * ந ம ; நே..யுங் — நா . . . - நு.ஸ்ரீ ; | ; ; —த்யா.; க . . | ரா ; ஜ ; — வி . நு . ||

ரிமகாஸா *
த . . . * (பருல)

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—2. அநுமப் படலம்

[63-வது பக்கத் தொடர்ச்சி]

இருள்தீர்ந் தேகிட வொளிமீய வேண்டும்.

கரைகா ணலரிதென் றி இராமன் கண்விழித்துக் கிடந்தவக் கங்குலுங் கழியும்படி கதிரவன் தோன்றினன். இதனை,

பொங்கிமுற் றியவுணர்வு புணர்தலும் புகையினொடு
பங்கமுற் றனையவினை பரிவுறும் படிமுடிவில்
கங்குலிற் றதுகமல முகமெடுத் தனகடலில்
வெங்கதிர்க் கடவுளெழ விமலன்வெந் துயரினெழ

[தூயவனுகிய இராமன் கொடிய துயரத்தினின்று நீங்கும்படி, வெப்பமாகிய கிரணங்களையுடைய சூரியன், கடலிலே எழுந்தவுடன், வளர்ந்து முதிர்ந்த மெய்யுணர்வானது ஒருவனைச் சேர்ந்தஅளவில், புகையும் சேறும் கலந்ததுபோன்ற தீவினைகள் நீங்கிப்போய்விடுவதைப்போல, முடிவில்லாத அந்த இரவு கழிந்தது; தாமரை மலர்கள் விளங்கி மலர்ந்தன.]

எனக் கம்பர் கூறுகின்றனர். ஐயமும் மறைவு மின்றி நிற்கும் விடயங்களே மனிதரால் அதிகமும் மறக்கப்படும். புலவர்கள் புரியவல்ல உதவிகள் பலவற்றில், தெரிந்திருப்பதைத் தெரியவைத்தலே மிகச்சிறந்தது. ஒளியைக் கொணர்வதன்றி இருட்டினைப் போக்க வேறோர் உபாயம் இல்லையே இல்லையென்ன எடுத்துச் சாற்றுமிதனை புகையொடு கலந்த சேறனைய பொல்லாத தீவினைகளினின்று தப்பநினைக்கின்றமனிதர் என்ஞான்றும் காக்கக்கடவர். தீமையை ஓட்டித்துரத்தல் இயலாது. நன்மையைக் கொணர்தலே தீமையின் கழிவாம். மெய்யுணர்வு எய்தும்படி இயற்றினேமெனின் தீமையெல்லாம் தாமே நீர்ந்துவிடும். இதனை மனிதர்,நாடோறும்இரவுபகலென்ன நிகழுமந்நிகழ்ச்சியினின்று நினைவுசெய்துகொள்ளவேண்டு மென்றவோர் ஊக்கமுடைய கம்பர்,

துனியின்றி யுயிர்செல்லச் சுடராழிப்
படைவெய்யோன்
பனிவென்ற படியென்னப் பகைவென்று
படிகாப்போன்.

என்று தயரதனைக் குறித்ததுபோல் பல விடங்களில் பேசிப்பேசி உணர்த்துவதை இந்நூலின் பல விடங்களிற் காணலாம். நன்மையொளி தோன்றத் தீமையிருள் கழிந்த பின்னன்றே மனிதர்தம் வதன கமலங்கள் முகமெடுக்கும்.

கங்குல் கழிந்தது. கடலமிழ்தனைய சீதையை நாடுதல் புரிந்து ஏகிய இராமனும் இலக்குவனும், ருசியமூகமலையின்மேல் விரைந்து ஏறினர். அங்கிருந்த கவியரசு சுக்கிரீவன் இவர்களைக் கண்டு வெருவினன். இனி நிகழ்ந்ததை முனிக்கரசு வான்மீகரே முதலில் கூறட்டும்:—

அண்ணன்தம்பிகளாகிய அந்த ராமலக்ஷ்மணர்கள் உத்தம லக்ஷணங்களோடு கூடின பெரிய உருவம் பொருந்தி உத்தமங்களான ஆயுதங்களைத் தரித்திருப்பதனுல் வீரத்தன்மையுடன் விளங்குவதைக் கண்டு உடனே ஸுக்ரீவன் சங்கையுற்றனன். அந்த வானரர் தலைவன் மனத்தில் பயம் மேலெழப்பெற்றுத் திசைகளையெல்லாம் உற்றுப் பார்த்துக்கொண்டு ஓரிடத்திலும் நிலைகொள்ளாதிருந்தனன். அந்த வானரர் தலைவன் மஹா பலிஷ்டர்களான ராமலக்ஷ்மணர்களைப் பார்த்துக்கொண்டிருக்கையில் மனங்குதிரப்பெறுதிருந்தனன். ஆனல் அவனது மனம் மேன்மேலும் பயம் வளர்ந்துவரப்பெற்று மிகவுந் துயரத்திலாழ்ந்தது. அந்த ஸுக்ரீவன் ராஜதர்மங்களில் மிகுந்த மதியுடையவன். ஆகையால், 'இங்கே நின்றிருக்கக்கூடுமோ, அல்லது ஓடிப்போக வேண்டுமோ, எது நல்லது?'' என்று ஏற்றக்குறைவுகளை மந்திரிகளுடன் கலந்து ஆலோசித்து மிகவும் அஞ்சினன். அனந்தரம் வானரப் பிரபுவாகிய அந்த ஸுக்ரீவன் அந்த ராமலக்ஷ்மணர்களைப் பார்த்துக்கொண்டே மிகவும் அஞ்சினவனுகி மந்திரிகளை நோக்கி 'இவர்கள் வாலியால் அனுப்பப்பட்ட சாரர்கள்; முனிவேஷமென்னும் வ்யாஜத்தினுல் நார்த்துணிகளை உடுத்துத் திரிந்துகொண்டு இங்குப் புகக்கூடாத இவ்வனத்திற்கு வந்தனர், இது நிஜம்' என்றனன். பெருவில்லைத் தரித்திருக்கிற அந்த ராமலக்ஷ்மணர்களைக் கண்டு ஸுக்ரீவன் சொன்னது ஹிதமென்று நினைத்து வானர வீரர்கள் அந்தத் தாழ்வரையினின்று உயர்ந்ததாகிய மற்றொரு பர்வதசிகரத்திற்குப் போயினர். அந்த வானர விரேஷ்டர்கள் நாலுதிசைகளிலும் ஓடிச்சென்று மீளவும் ஓரிடத்தில் ஒன்றுகூடித் தமக்குப் பிரபுவாகிய ஸுக்ரீவனைச் சுற்றிக்கொண்டு அருகே நின்றனர். மீளவும் அவர்கள் ஒரு பர்வதத்தினின்று மற்றொரு பர்வதத்திற்குக் குதித்துச்சென்று பர்வத சிகரங்களை அசைக்கிக்கொண்டு க்ரமமாக ஓரிடத்தில் ஒன்ருய்க்கூடி, ஓடிச்சென்று ஒன்றியாயிருக்கின்ற ஸுக்ரீவனைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டனர். பிறகு மஹாபலசாலிகளான அந்த வானரர்கள் அனைவரும், தொத்திச் சென்று பர்வதங்களில் புஷ்பித்திருக்கிற விருக்ஷங்களை முறித்தனர். அப்பொழுது அந்த வானரர்கள் கிளம்பித் தாண்டிச் சென்றுகொண்டும்,மான்கள் பூனைகள் புலிகள் முதலியவற்றைத் துரத்திக்கொண்டும் போயினர். அனந்தரம் அந்த ஸுக்ரீவனுடைய மந்திரிகள் அனைவரும் ருஷியமூகத்தின் தாழ்வரைகளில் முழுமையும் திரிந்து மீளவும் அந்தப் பர்வதத்தைச் சேர்ந்து வானரஸிரேஷ்டனுகிய ஸுக்ரீவனுடன் கூடி அவனருகில் கையைக்கூப்பிக்கொண்டு நின்றனர். பிறகு பேசுவதில் நிபுணனுகிய ஹனுமான், வாலி ஏதோ மோசஞ் செய்தானென்று சங்கித்து அஞ்சி வருந்துகின்ற அந்த ஸுக்ரீவனைப் பார்த்து 'நீங்கள் எல்லோரும் வாலி நிமித்தமாக இங்ஙனம் மனம் தத்தளிப்பது யுக்தமன்று. இந்தப் பர்வதம் ருஷியமூகமேயன்றி வேறன்று. இதில் வாலியால் எள்ளளவும் நமக்குப் பயமில்லை. வானரதிலகனே! வாலி மாறுவேஷம் பூண்டு வந்திருக்கிருனென்று பிரமிக்கின்றனையோ? எவனைப் பார்த்து நீ மனத்தில் இவ்வண்ணம் திகில்பட்டு ஓடிப்போகின்றனையோ அந்த வாலி க்ரூரகர்மமுடையவன்; அவனது காட்சியும் க்ரூரமாயிருக்கும். அந்தக்குறி இவர்களிடத்தில் எனக்குப் புலப்படவில்லை. நல்லியற்கையுடையவனே! உன் பத்தினியை அபகரித்த எந்தப் பாபகர்மாவிடம் பயப்படுகின்றனையோ, அந்தத் துஷ்டாத்மாவாகிய உனதண்ணன் வாலியின் குணக்குறிகள் இவரிடத்தில் இல்லை. ஆகையால் உனக்கு எள்ளளவும் பயம் உண்டாகுமென்று எனக்குத் தோற்றவில்லை. நீ தீக்ஷணபுத்தியுடன் நன்கு விசாரஞ் செய். மனத்தை நிலைப்படுத்திக் கொள்ளாமல் தடுமாறுகின்றனையே! ஆ ஆ! உன் வானரத்தன்மை நன்கு வெளியாயிற்றே! புத்தியும் விஜ்ஞானமும் நன்கு விளங்கப்பெற்று இங்கிதங்களால் பிறரது அபிப்ராயங்களை அறிந்து ஸமஸ்த காரியங்களையும் செய்வாயாக. புத்தி முதலியவை யில்லாத மன்னவன் எந்தப் பிராணியையாயினும் பாதுகாக்க வல்லவனல்லன்' என்றனன். ஸுக்ரீவன், ஹனுமான்சொன்ன சுபவாக்கியங்களை யெல்லாங்கேட்டு, அதைக்காட்டிலும் சுபமான வாக்கியங்களைச் சொல்லத் தொடங்கி அவனைப்பார்த்து 'முழந்தாள்வரையிலும் நீண்ட பாஹு தண்டங்களை யுடையவர்களும் கண்கள் அகன் றழகாயிருக்கப்பெற்றவர்களும் வில்லையும் பாணங்களையும் கத்தியையும் தரித்துத் தேவகுமாரர்கள்போல் விளங்குவோர்களுமாகிய இவர்களைப் பார்க்கையில் எவனுக்குப் பயம் உண்டாகாது? வாலி எதிரில் வந்திருக்கிருனென்று பயப்படவில்லை. அவன் இந்தப் புருஷதிலகர்களை என்மேல் அனுப்பினுனென்று சங்கைப்படுகின்றேன்.'இப்படிப்பட்ட புருஷர்கள் வாலிக்கு நேரவழியில்லை' என்கிருயோ? ராஜர்களுக்கு ஸ்நேகிதர்கள் பலர் இருப்பார்கள். ஆகையால் ராஜர்கள் விஷயத்தில் எவ்வளவும் நம்பிக்கை வைக்கலாகாது. சத்ருக்களையுடைய மனிதன் தன்மேல் பகையைத் தீர்த்துக் கொள்ளும்பொருட்டு மறைவாகத் திரிகின்ற பகைவனைக்கண்டுபிடித்துத் தெரிந்துகொள்ளவேண்டும். இல்லையாயின், அவர்கள் அவனைத் தம்மை நம்பும்படிக்குச்செய்து தாம்மாத்திரம் அவனை நம்பாமலேயிருந்து அங்ஙனம் நம்பிக்கையால் அவன் ஏமாந்திருக்கும் ஸமயம் பார்த்துக் கொன்றுவிடுவார்கள். வாலி, வேண்டிய காரியங்களைச் செய்வதில் மிகவும் தூரத்ருஷ்டியுள்ள பேரறிஞன். அரசர்கள் பல உபாயங்களைச் செய்து பகைவனைக் கொல்லப்பார்ப்பார்கள். ஆகையால் மனிதர்கள் தீன வேஷங்களைத் தரித்துத் தெரியாமலிருந்து அவரது அபிப்பிராயங்களை அறியவேண்டும். வானரோத்தமனே! ஒரு சாமான்னியனுடையவேஷந்தரித்து அவரிடஞ்சென்று உட் கருத்தை அறிவிக்கும்படியான அவரது சரீரசேஷ்டைகளைப் பரிசீலித்து அவற்றில் ஒவ்வொன்றுக்குமுள்ள பேதங்களைப்பற்றியும், இனிமை கொடுமை முதலிய ஆகாரங்களாலும் ஒருவர்க்கொருவர் பேசும் பேச்சுக்களாலும் அவரது உண்மையைத் தெரிந்துகொள்வாயாக. வானரவிரேஷ்டனே! அவரது அபிப்பிராயத்தைக் கண்டு அறிவாயாக. அவரது மனத்தில் கெடுநினைவு இருக்குமாயின், அது போவதற்கு அந்தந்த நல்லவார்த்தைகளாலும் புகழ்ச்சிகளாலும் அடிக்கடி அவர்க்கு நம்பிக்கையை உண்டுபண்ணி எனக்கு அனுகூலமாயிருக்கும்படி அவரைத் திடப்படுத்திப் பிறகு அவர்கள் வில்லைத் தரித்து இவ்வனம் புகுவதற்கு ப்ரயோஜனம் என்? என்று வினவுவாயாக. ஹனுமானே! வில்லைப்பிடித்து வந்த இவர்கள் மனத்தில் நல்ல எண்ண முடையோர்களாயின், அப்பொழுதும் அவர்களை என்பக்ஷ முடையவர்களாகச்செய்து அவரது வரவுக்குப் பிரயோஜனத்தை வினவித் தெரிந்துகொள்வாயாக. அவரது வார்த்தைகளாலும் அவர்கள் துஷ்டர்களோ நல்லவர்களோ தெரிந்துகொள்ளக்கூடும்' என்றனன். வாயுகுமாரனுகியஅந்த ஹனுமான்அந்தக் கபிராஜன்இங்ஙனம் சொல்லி அனுப்புகையில், நல்லதென்று அந்த ராமலக்ஷ்மணர்க ளிருக்குமிடம் போக நினைத்தனன். சத்ருக்களுக்கு மிகவும் பயங்கரனும் எதிர்க்க முடியாதவனுமாகிய அந்த ஸுக்ரீவன் மொழிந்த வார்த்தைகளை மஹானுபாவனுகிய ஹனுமான் 'அப்படியே செய்கிறேன்' என்று கொண்டாடி, ராமனும் மஹாபலனுகிய லக்ஷ்மணனும் இருக்கு மிடத்திற்குப் போயினன்.

எமாங்கதத் திளவரசன்
ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.
கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை

199155

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலக.தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்தது) ம.ட.வி.மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ம.ட.ச்யாவனப்ராச. சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசோந்த திற்ரமனைக்கு என்னவோ
ஜ்வரேக
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

தங்க டெலி போன்:—மிஸ் பின்ஸ் டெஸ்மாண்டு என்னும் சினிமாப்பட நடிகை தங்கத்தால் செய்த டெலிபோனையே உபயோகிக்கின்றனளாம்.

*   *   *

நல்ல உயிர்:—ஹங்கேரியில் ஒரு மாது ஐம்பது முறை தற்கொலை செய்துகொள்ள முயன்றும் சாகவில்லை. எனவே, அவள் இனி உயிர் வாழ்வதென்று முடிவுசெய்துவிட்டாளாம்.

*   *   *

செயற்கை இருதயம்:—ருஷியா தேசத்தில் மாஸ்கோ நகரத்திலுள்ள பக்டா சரோர் இன்ஸ்டியூட் என்ற ஸ்தாபனத்தில் உள்ள வைத்தியர்கள் செயற்கையான இருதயம் ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். நோயாளிகள் இருதயம் சீர்கெட்டிருந்தால் அதனை எடுத்துப் பழுதுபார்க்குமாறு இந்தச் செயற்கை இருதயத்தை அந்த இடத்தில் பொருத்தி வைக்கின்றார்களாம்.

*   *   *

குள்ளர் மகாநாடு:—ஹங்கேரியிலுள்ள புடாபெஸ்தில், குள்ளர்கள் சங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அச்சங்கத்தில் 216 குள்ள அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இப்புதுமைச் சங்கம் குள்ளர்களின் உரிமைகளுக்காகப் போராடத் தீர்மானித்திருக்கிறது. அச் சங்கம் அடுத்த வருஷம் புடாபெஸ்தில் சர்வ தேசக் குள்ளர்கள் காங்கிரஸ் ஒன்று நடத்த உத்தேசித்திருக்கிறது. அதற்கு உலக முழுவதிலுமிருந்து சுமார் ஆயிரம் குள்ளர்கள் போவார்களாம்.

*   *   *

ஆடும் சிங்கமும் உறவாடும் நாள்:—பூர்ண சூரிய கிரகணம் ஏற்படும் பொழுது காட்டில் வசிக்கும் துஷ்ட மிருகங்கள் தங்களுடைய பகைமையை மறந்து நேசமாக உறவாடுவதைக் காணலாமென்று ஆப்பிரிக்கா தேசச் சுதேசிகள் கூறுகின்றார்கள். இதனைப் பரீக்ஷிக்கப் பெல்ஜிய தேச ஸினிமாப் படம் பிடிப்பவர்கள் ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர். இவ்வருஷம் ஆகஸ்டு மாதம் 20-ந் தேதி யன்று மத்திய ஆபிரிக்காவில் பூர்ண சூரிய கிரகணம் ஏற்படும். அச்சமயம் ஓர் ஓடையினருகில் போட்டோப் பிடிப்பவர்கள் ஒளிந்திருந்து சிங்கம், ஆடு, யானை, ஒட்டைச்சிவிங்கி முதலியன பயந்துகொண்டு ஒன்றுபட்டு நிற்குமென்றும் அக்காட்சியைக் காணலாமென்றும் நம்பப்படுகிறது.

*   *   *

திருவிதாங்கூர் அதிசயம்:—திருவிதாங்கூர் கல்வெட்டு இலாகா அதிகாரிகளால் தேவிகுளத்துக்குச் சுமார் 30 மைலுக்கு அப்பாலுள்ள மறையூர் என்ற கிராமத்தில் பூமிக்குள் புதைந்து கிடந்த ஒரு கற்கோயில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது பத்தாவது நூற்றாண்டில் பணி செய்யப்பட்டிருக்க வேண்டுமென்று நம்பப்படுகிறது. பாறையைக் குடைந்து அந்தக் கோயில் நிர்மிக்கப்பட்டிருக்கிறது. லக்ஷ்மி, பார்வதி, விஷ்ணு, கணபதி முதலிய தெய்வங்களின் விக்கிரகங்களும் ஒரு தியானியின் சிலையும் அங்குக் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் அந்தக் கிராமத்துக்கு விஜயம் செய்த திருவிதாங்கூர் கல்வெட்டு இலாகா அதிகாரி பூமிக்குள்புதைந்துகிடந்த சில கற்சிலைகளையும் கல்சுவர் மதில் கட்டுகளையும் கண்டு பிடித்தார்.

*   *   *

செத்தவனுக்குப் புத்துயிர்:—ருஷியா தேசத்தின் மாஸ்கோ சர்வ கலாசாலையின் வைத்திய ஆசிரியரான வலிமிர்னவ் என்பவர், செத்தவர்களுக்குப் புத்துயிர் தருகிறார். இவ்வைத்திய நிபுணர் செத்த நாய்களையும் பூனைகளையும் மீண்டும் உயிர் பெறச் செய்ய முயன்று அம்முயற்சிகளில் வெற்றி பெற்றார். கடைசியில் சென்ற பிப்ரவரி மாதம் 28-ம்தேதி யன்று ஒரு செத்த மனிதனிடத்தும் தம் வித்தையைப் பரிக்ஷித்துப்பார்த்தார். சுமார் 43 வயதான ஒரு மனிதன் மார்படைப்பால் ஒரு வீதியில் இறந்து விழுந்துவிட்டான். வலிமிர்னவ் என்ற அவ்வைத்தியர் அம்மனிதனின் இருதயத்தைத் திறந்து தாம் கற்ற சில முறைகளால் அவனுடைய இருதயத்திற்குச் சக்தி உண்டாக்கி, சில குத்து மருந்துகளைச் செலுத்தினார். சுமார் முக்கால் மணி நேரம் கழித்து செத்தவனுடைய இருதயம் துடிக்க ஆரம்பித்தது. வேறு நோய்காரணமாக அன்றிக் களைப்பால் ஏற்படும் மார் அடைப்பால் இறந்தவர்களுக்கெல்லாம் புத்துயிர் அளிப்பதாக உலகத்திற்கு விளம்பரம் அவர் செய்கிறார்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.

All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras.
OR
R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—

T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras.
OR
R. G. DAS & Co., ***Managers.***

கோடையின் கொடுமை

நீங்கள் ஆயுர்வேத முறைப்படி செய்யப்பட்ட
எங்களுடைய
மணி தைலத்தை
உபயோகித்தீர்களா?

மூளையைக் குளிரச்செய்து கை கால் கண்களின் எரிச்சலைச் சமனஞ்செய்து தலை மயிரை நீண்டு வளரும்படி செய்யும். உடனே வாங்கி உபயோகியுங்கள்.

5 தூலம் தைலங் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1.

இனும்! கேட்லாக். இனும்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)